பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 02 திங்கட்கிழமை 18.11.2019 கதிர் 13

## இனி இது ரகசியம் அல்ல!

தேர்தல்திருவிழாக்களில்பெரிய திருவிழா நடைபெற்று முடிந்து விட்டது. ஜனாதிபதித் தேர்தலைத் தான் கூறுகின்றேன்.

இந்தத் தேர்தல் திருவிழாவில் கிடைத்த பெரிய வெற்றி மஹிந்த தரப்புக்கு இனி இருக்கின்ற சிறிய திருவிழாக் பக்கம் 02 »

# 13 இலட்சம் வாக்குகளால் கோட்டாபய பெரு வெற்றி!

## சஜித்தை நிராகரித்தனர் தெற்கு மக்கள்



கொழும்பு, நவ. 18

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ 13 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளினால் வெற்றி பெற்று இலங்கை ஜனநாயக சோசலிசக் குடிய ரசின் 7 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளார் எனத் தேர்தல் ஆணைக்குழு தலைவரினால் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. பக்கம் 03 »

## எதிர்பார்த்த வெற்றி கிடைத்து விட்டது!

### பஸில் ராஜபக்ஷ பெருமிதம்



கொழும்பு, நவ. 18

எதிர்பார்த்ததைப் போன்று ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்காபொதுஜனபெரமுன அமோக வெற்றி பெற்றுள்ளது. வெற்றியை பக்கம் 03 »

## 135,499 வாக்குகள் நிராகரிப்பு!

கொழும்பு, நவ. 18

இலங்கையின் 7 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்காக அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் ஒரு லட் பக்கம் 13 »

## ஜனாதிபதி கோட்டாவுக்கு வடக்கு ஆளுநர் வாழ்த்து




யாழ்ப்பாணம், நவ. 18

இலங்கையின் 7 ஆவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக தெரிவு செய்யப் பட்டுள்ள கோட்டாபய ராஜபக்ஷ வுக்கு வடக்கு பக்கம் 13 »

## பாதுகாப்பான ஒரு சூழலையே தமிழ் மக்கள் விரும்புகிறார்கள்

### கோட்டாவுக்கான வாழ்த்துச் செய்தியில் விக்கி



கொழும்பு, நவ. 18

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தனது பக்கம் 03 »

## மஹிந்தவின் பிறந்த தினமான இன்று அனுராதபுரத்தில் கோட்டா பதவியேற்பு

மூத்த சகோதரர் மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாளான இன்று காலை 7 மணிக்கு கோட்டாபய ராஜபக்ஷ புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்கின்றார்.

அனுராதபுர ருவன்வெலி மகாதூபி முன்பாக கோட்டாபய இன்று காலை பதவிப் பிரமாணம் செய்வார்.

இந்த வைபவத்தில் எதிர்க் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, எதிரணியின் எம்.பிக்கள் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர். (ஐ)

## எதிராக வாக்களித்தவர்களுக்கும் நான் ஜனாதிபதியாக இருப்பேன்

### வெற்றியின் பின் கோட்டாபய கருத்து



கொழும்பு, நவ. 18

என்னை வெற்றி பெற செய்த மக்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் எதிராக வாக்களித்தவர்களுக்கும் நான் ஜனாதிபதியாக பக்கம் 13 »

## பங்காளிக் கட்சிகள் கோரியும் பதவி விலக மறுத்தார் ரணில்!

கொழும்பு, நவ. 18

புதிய ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் கோட்டாபய ராஜபக்ஷ அமோக வெற்றியீட்டி ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள நிலையில் – அவர்கள் ஆட்சியமைப்பதற்காக பக்கம் 03 »

## பொதுத் தேர்தலுக்கு செல்ல பிரதமர் ரணில் யோசனை!

### நாடாளுமன்றக் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டத் திட்டம்

கொழும்பு, நவ. 18

அடுத்த பொதுத் தேர்தல் தொடர்பில் சபாநாயகர் மற்றும் நாடாளுமன்றக் கட்சிகளுடனான கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என்று பிரதமர் பக்கம் 03 »

## மோடியின் அழைப்பையேற்று இந்தியா செல்கிறார் கோட்டா!




கொழும்பு, நவ. 18

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய கோட்டபாய ராஜபக்ஷவை நேற்றுமாலைதொலைபேசி பக்கம் 03 »

## வடக்கு - கிழக்கு மக்கள் ஆணைக்கு மதிப்பளிக்கவேண்டும் கோட்டாபய

### இலங்கைத் தமிழரசுக் கட்சி கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 18

ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு – கிழக்கு மக்கள் வாக்களிப்பின் மூலம், பிரத்தியேகமான செய்தி ஒன்றைப் புதிய ஜனாதிபதிக்குச் சொல்லியிருக் பக்கம் 03 »

## ஐ.தே.கவின் அமைச்சர்கள் பலரும் தொடர் இராஜினாமா!



கொழும்பு, நவ. 18

ஜனாதிபதித் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித்பிரேமதாஸ படுதோல்விகண்டதை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய அமைச்சர்கள் கூண்டோடு இராஜினாமாவை அறிவித்துள்ளனர். அமைச்சர்களான மங்கள சமரவீர, அஜித் பி பெரேரா, பக்கம் 03 »

# எதிர்காலத்தில் அரசில் அமைச்சுப் பதவிகளை ஏற்பது தொடர்பில் கூட்டமைப்பு பரிசீலிக்கும்!

## கூறுகிறார் சுமந்திரன் எம்.பி.



யாழ்ப்பாணம், நவ. 18

**எதிர்காலத்தில் அரசில் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்று அதனூடாக மக்களுக்கு சேவை யாற்றமுடியும் என நாம் நினைக்கின்றோம். கூட்டமைப்பு அவ்வாறு செயற்படவேண்டும் என்று மக்களும் எதிர் பார்க்கின்றார்கள். இது குறித்து கூட்டமைப்பு விரைவில் பரிசீலித்து முடிவெடுக்கவுள்ளது.**

**–இப்படிக் கூறினார் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன்.**

நேற்றிரவு தனியார் தொலைக் காட்சி ஒன்றில் நடந்த நிகழ்வில் பங்கேற்று கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்– எமது அரசியல் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் வரை அரசில் இணைந்து அமைச்சுப் பதவிகளை ஏற்பதில்லை எனக் கூட்டமைப்பு ஒரு கொள்கையைக் கொண்டுள்ளது. ஆயினும் அவ்வாறு இருப்பதால் எமது மக்களுக்குச் செய்யவேண்டிய பலவற்றை செய்யமுடியாமல் போகின்றது. இதனால் தீர்வு கிடைக்கும் வரை காத்திருக்காமல் எதிர்காலத்தில் அரசில் இணைந்து அமைச்சுப் பதவிகளைப்பெற்று மக்களுக்குச் சேவையாற்றவேண்டும் என்றே மக்களும் எதிர்பார்க்கின்றனர். இதனால் கூட்டமைப்பு இது குறித்துகூடி ஒரு முடிவுக்கு வரும் –என்றார். ஜ

# உங்களது வெற்றியில் பங்கெடுக்காத சிறுபான்மை மக்களினதும் மனங்களையும் வென்று இனங்களின் இணைப்புப் பாலமாகுங்கள்!

**புதிய ஜனாதிபதி கோட்டாவுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் ஹக்கீம் வலியுறுத்து**

கொழும்பு,நவ.18

உங்களது வெற்றியில் பங்கெடுக்காத சிறுபான்மை மக்களின் கணிசமானோரின் மனங்களையும் வென்றெடுத்து, இனங்களுக்கிடையிலான இணைப்புப் பாலமாக அமைவதற்கும், குறுகிய வேறுபாடுகளுக்கு அப்பால் அனைத்து மக்களும் சமமானவர்கள் என்ற மனப்பதிவை ஏற்படுத்துவதற்கும் முன்வருவீர்கள் என்று நம்புகின்றோம்.

–இவ்வாறு புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கோட்டாபய ராஜபக்ஷவுக்குத் தாம் அனுப்பிவைதுள்ள வாழ்த்துச் செய்தியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:–

இந்த ஜனாதிபதித் தேர்தலில் அமோக வெற்றியீட்டியுள்ள தங்களுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதே வேளையில், எமது கட்சியின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டு சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்த எமது ஆதரவாளர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாட்டின் சில பிரதேசங்களில் சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் எங்கள் ஆதரவாளர்கள் ஜனநாயக விழுமியங்கள் மற்றும் தங்களது வாக்குரிமையின் பலத்தை பாதுகாக்கும் வகையில் செயற்பட்டுள்ளமை தொடர்ந்தும் எங்களுக்கோர் உந்து சக்தியாக அமைந்துள்ளது.

நாடு தழுவிய ரீதியில் அதிகூடிய வாக்களிப்பு வீதம் பதிவாகியுள்ளமையானது பொதுமக்கள் ஜனநாயகத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையைப் பிரதிபலிக்கின்றது. ஆனாலும் வாக்களிப்பு நடந்த விதம் எமது சமூகங்களுக்கு இடையிலான ஆழமான துருவப்படுத்தலை வெளிக்காட்டுகின்றது.

எனினும் சகல இலங்கையர்களினதும் நலன் கருதிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான கடினமான முடிவுகளை எடுப்பதில் பலத்த சவால்களை நீங்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதல், சட்டத்தின் ஆட்சி , நாட்டின் பன்முகத்தன்மை மற்றும் ஜனநாயகத்தின் பெறுமதிகள் என்பவற்றை போஷிப்பதற்கான செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியுள்ளது. உங்களது நிர்வாகத்தின் கீழ் அமைதி, ஒற்றுமை, இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் மற்றும் சகல இனங்களுக்கும் மத்தியில் நிலைத்து நிற்கக் கூடிய நல்லெண்ணம் என்பவற்றுக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று நம்புகின்றோம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலானது சமூக ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பு என்பவற்றில் மன்னிக்க முடியாததும், அழிக்க முடியாததுமான வடுவை ஏற்படுத்தியுள்ளது. அத்தகைய பாரதூரமான அனர்த்தத்தின் உண்மைத் தன்மையை கண்டறிவதற்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முயற்சிகளில் எதிர்க்கட்சி பங்குபற்றாமை ஒரு கறையாகப் படிந்துள்ளது.

அத்துடன், தேர்தல் பரப்புரைகளின்போது தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் தலைமைகள் மீது அநீதியானதும், அடிப்படையற்றதுமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டமையும் வருந்தத்தக்கது.

எவ்வாறாயினும், தேர்தல் பெறுபேறுகளை உற்றுநோக்குகையில், பெரும்பான்மை மேலாதிக்க மனோபாவமுள்ள நாட்டில் சகல சமூகத்தினரையும் உள்ளடக்கிய ஒன்றுபட்ட தேசமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான புதிய வாய்ப்பொன்று கிட்டியுள்ளது.

தேர்தலோடு ஒட்டியதான – இனங்களுக்கிடையான துருவப்படுத்தலை–நீக்கும் முயற்சிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட வேண்டும். வெவ்வேறு சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கம் மற்றும் உரிமைகளைப் பாதுகாக்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்று உங்களுக்கு வாய்த்துள்ளது.

இலங்கை முஸ்லிம்களின் அதிகபட்ச ஆணையைப் பெற்ற கட்சி என்ற வகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள உங்களை வாழ்த்துகின்றது.

வரலாறு அதற்கான சாளரமொன்றை மீண்டும் ஒருமுறை உங்களுக்குத் திறந்து தந்துள்ளது. இவ்வாறான ஒரு சந்தர்ப்பம் 2009ஆம் ஆண்டில் யுத்த நிறைவின் பின்னர் உங்களுக்கு முன்னொருதடவையும் கிட்டியிருந்தது.

உங்களது வெற்றியில் பங்கெடுக்காத சிறுபான்மை மக்களின் கணிசமானோரின் மனங்களை வென்றெடுத்து, இனங்களுக்கிடையிலான இணைப்புப் பாலமாக அமைவதற்கும், குறுகிய வேறுபாடுகளுக்கு அப்பால் அனைத்து மக்களும் சமமானவர்கள் என்ற மனப்பதிவை ஏற்படுத்துவதற்கும் முன்வருவீர்கள் என்று நம்புகின்றோம்.–என்று உள்ளது.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை வேகமாக நடத்தி முடிப்பதற்கு ஊக்கத்தையும் ஈடுபாட்டையும் தரும் என்பது சர்வ நிச்சயம்.

ஆகவே அடுத்தடுத்த தேர்தல் திருவிழாக்கள் வேகமாகக் கட்டவிழும் என்பது உறுதி.

நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைத்து நேரத்துடன் பொதுத்தேர்தல் ஒன்றுக்குப் போகத் தயார் என்று ரணில் விக்கிரமசிங்க கோடி காட்டியிருக்கின்றார். அந்த நிலைப்பாட்டில் அவர் தொடர்ந்து இருப்பாராயின் உடனடியாக நாடாளுமன்றத் தேர்தல் நடக்கும் சாத்தியம் உண்டு.

அப்படி இல்லாமல் ஜனாதிபதித் தேர்தல் வெற்றியை அடுத்துக் கட்டவிழும் அரசியல் நடவடிக்கைகளை ஒட்டி அரசு மாற்றம் வருமானால் – மஹிந்தர் தரப்பின் கைகளில் அரசும் அடுத்து வரும் நாள்களில் வீழுமானால் – நாட்டின் ஒன்பது மாகாணங்களுக்குமான மாகாண சபைத் தேர்தல்கள் உடனடியாக நடத்தப்படும் என எதிர்வுகூறப்படுகின்றது.

பழைய மாகாண சபைத் தேர்தல் சட்டங்களின் கீழ் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு வழி செய்யும் ஒரு வரிச் சட்டமூலம் ஒன்றை சாதாரண பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினால் போதும். அந்தத் தேர்தலை உடன் நடத்தி விடலாம்.

ஏற்கனவே இப்படி மாகாண சபைத் தேர்தல்களை இரண்டு வருடங்களுக்கு மேல் நடத்தாமல் இழுத்தடித்திருக்கத் தேவையில்லை. இப்படி ஒரு வரிச் சட்ட மூலத்தை நிறைவேற்றி பழைய தேர்தல் சட்டங்களுக்கு அமைவாக அதை நடத்த முடியும்.

அதற்கான ஏற்பாடுகளை இரண்டு வாரத்துக்குள் முடித்து மாகாண சபை தேர்தலை உடனடியாகப் பிரகடனப்படுத்த முடியும். பிரகடனப்படுத்தியிருக்கலாம்.

ஆனால், ஏற்கனவே இந்த வருட முற்பகுதியில் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்திக் கையைச் சுட்டுக்கொண்ட ரணிலின் அரசு, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அப்படி ஒரு அமிலச் சோதனையை நடத்தத் தயாராக இருக்கவில்லை. அதனால் மக்களின் வாக்குரிமை என்ற இறையாண்மைப் பிரயோகத்துக்கு இடமளிக்காமல் தந்திரமாக ஏமாற்றித் தடுப்புப் போட்டு வந்தது ரணிலின் அரசு.

அந்த அரசுக்கு இவ்வளவு காலமும் முண்டு கொடுத்து வந்த தமிழ்க் கூட்டமைப்புக்கும் வடக்கு, கிழக்கில் உடனடியாக மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்ளத் திராணி இருக்கவில்லை. நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்திக் கையைச் சுட்டும் கொண்டால், வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் தங்களுக்குப் பேரடி விழுந்து விடலாம் என அஞ்சிய கூட்டமைப்பினரும் இந்த மாகாண சபைத் தேர்தல்களை நடத்தும்படி ரணிலின் அரசுக்குப் போதிய அழுத்தம் கொடுக்காமல் அம்சடக்காகவே இருந்தனர். கூட்டமைப்பினர் நினைத்திருந்தால் – தங்கள் தயவில் ஆட்சியைக் கொண்டு நடத்தும் கட்டாயத்தில் இருந்த – இருக்கின்ற – ரணில் அரசுக்கு ஒரேயடியாக அழுத்தம் கொடுத்து தேவைப்பட்ட ஒரு வரிச் சட்ட மூலத்தை ஒரே வாரத்தில் கொண்டு வர வைத்து, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றச் செய்து இந்த மாகாண சபைத் தேர்தலை எப்போதோ நடத்தப் பண்ணியிருக்கலாம்.

ஆனால், கூட்டமைப்புக்கும் அப்போது பயம். இந்த விடயத்தைத் தொடுவான் ஏன், பிறகு அவஸ்தைப் படுவான் ஏன் என்று கருதி அது அமுக்கி வாசித்து விட்டது.

ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் தங்கள் வழிகாட்டலை வடக்கு, கிழக்கு மக்கள் முழுமையாக ஏற்று, முழுப் பங்களிப்பை உறுதியாகக் காட்டியிருக்கின்றமை கூட்டமைப்புத் தலைமைக்குச் சற்று திருப்தியையும், துணிச்சலையும் தந்திருப்பதாகத் தெரிகின்றது. எந்தத் தேர்தல் என்றாலும் துணிந்து களமிறங்கலாம் என்ற உறுதி கூட்டமைப்புக்கு வந்திருப்பதால், இந்த மாகாண சபைத் தேர்தல்களை நடத்தும் முயற்சி ரணில் அரசினால் – அல்லது அதற்கு மாற்றீடாக வரக்கூடிய பொதுஜன பெரமுன அரசினால் – நாடாளுமன்றத்தில் நகர்த்தப் படுமானால் அதற்குக் கூட்டமைப்பு முழு ஒத்துழைப்புத்தரும் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இந்த விடயத்தில் – மாகாண சபைத் தேர்தல்களை நடத்தாமல், மக்களின் வாக்குறுதியை இழுத்தடித்த குற்றச்சாட்டு விரல் தம்மை நோக்கி நீளாமல் தவிர்ப்பதற்காக, மேற்படி ஒரு வரிச்சட்ட மூலத்தை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தனிநபர் பிரேரணையாக சபையில் சமர்ப்பித்து வைத்திருக்கின்றார் – ஒப்புக்குச் சப்பாணி போல.

வழக்கமாக இப்படித் தனிநபர் பிரேரணையாக ஒரு சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டால் அது பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு, நாடாளுமன்றில் விவாதிக்கப்பட்டு, விடயம் நகர்வதற்கு ஆறு மாதம் முதல் ஒரு வருடம் காலம் தேவைப்படும். அரசின் சட்ட மூலமாக வந்தால் மட்டுமே அது அவசர அவசரமாக முன்னெடுக்கப்பட முடியும்.

தனிநபர் பிரேரணையாக இந்தச் சட்டமூலத்தை சமர்ப்பித்த சுமந்திரனுக்கு அது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் நிலை வரும்போது இந்த நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் முடிந்து, அது காலாவதியாகும் நிலைமை வந்திருக்கும் என்பது நன்கு தெரியும். அதனால்தான் நிலுவையில் இருக்கும் மாகாண சபைக்கான தேர்தல்களை பழைய தேர்தல் சட்டத்தின்படி நடத்துவதற்கு வழி செய்யும் இந்த ஒரு வழிச் சட்ட மூலத்தை அவர் தனி நபர் பிரேரணையாகச் சமர்ப்பித்தமையை 'ஒப்புக்குச் சப்பாணி' என்ற பதத்தினால் நான் குறிப்பிட்டேன்.

நேற்று ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை உத்தியோகபூர்வமாக அறிவித்த தேர்தல்கள் ஆணையகத்தின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய கூட, அந்த உத்தியோகபூர்வ அறிவிப்பின் முடிவில் மேற்படி நிலையில் நடத்தப்படாமல் இருக்கும் மாகாண சபைத் தேர்தல்களை, மேலும் காலம் தாமதிக்காமல் உடன் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யும்படி புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் விநயமாக வேண்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

வெற்றிக் களிப்பில் மிதக்கும் மஹிந்த தரப்பு, வரக்கூடிய நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்னர் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி, ஆங்காங்கே மாகாணங்களில் தமது நிலையை ஸ்திரப்படுத்திக் கொண்டுதான் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்கு முயற்சிக்கும் என்பது திண்ணம்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பான பழைய சட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வந்து, அதன் கீழ் நிலுவையில் இருக்கும் சகல மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை நடத்தும் படி கோரி நாடாளுமன்றில் சுமந்திரன் சமர்ப்பித்துள்ள தனி நபர் பிரேரணை மீதான முதலாம் வாசிப்பு நாடாளுமன்றில் முடிவடைந்து, முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டு விட்டது. இந்த முன்னறிவித்தல் கொடுத்து ஒரு வாரமும் கடந்து விட்ட நிலையில் அதை ஆட்சேபித்து யாரும் நீதிமன்றுக்குச் செல்லவில்லை. இப்போது இந்தப் பிரேரணையை அரசு தனது பிரேரணையாகக் கையில் எடுக்குமானால் அதனை அடுத்த நாடாளுமன்ற அமர்விலேயே சபையில் நிறைவேற்றி பழைய மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரமுடியும். அது நடைமுறைக்கு வந்தவுடன் அந்தத் தேர்தலை இனியும் தாமதமின்றி நடத்தலாம்.

ஆகவே, இனி எந்த நேரத்திலும் மாகாண சபைத் தேர்தல்களுக்கான விடயங்கள் விரைவாகக் கட்டவிழலாம். எனவே கட்சிகள், தரப்புகள் தேர்தலுக்கு தயாராகலாம் தயாராகிக் கொள் ளுங்கள்.!

– மின்னல்–

## 13 லட்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுஜன பெரமுனவின் கோட்டாபயராஜபக்ஷ6,924,255 (52.25%) வாக்குகளையும், புதிய ஜனநாயகமுன்னணியின்ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச 5,564,239(41.99%)வாக்குகளையும், தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதிவேட்பாளர்அநுரகுமார திஸாநாயக்க 418,553 (3.16%) வாக்குகளையும்பெற்றுள்ளனர்.

நுவரெலியா, யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் திகாமடுலை ஆகிய தேர்தல் மாவட்டங்களில் சஜித்பிரேமதாஸஅமோகவெற்றி பெற்றுள்ளார்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, இரத்தினபுரி, கேகாலை, மொனராகலை, பதுளை, அனுராதபுரம், பொலனறுவை, குருநாகல் மற்றும் புத்தளம் போன்ற மாவட்டங்களில் கோட்டாபய ராஜபக்ஷ அமோக வெற்றி பெற்றுள்ளார்.

இந் நிலையில் 52.25 சதவீத வாக்குகளை பெற்று, இலங்கையின் 7 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தேசிய அளவிலான இறுதி முடிவு:

| | | |
|---|---|---|
| கோட்டாபய ராஜபக்ஷ | 6,924,255 | (52.25%) |
| சஜித் பிரேமதாஸ | 5,564,239 | (41.99%) |
| அனுரகுமார திசநாயக்க | 418,553 | (3.16%) |
| மகேஷ் சேனநாயக்க | 49,655 | (0.37%) |
| ஹிஸ்புல்லா | 38,814 | (0.29%) |
| ஆரியவன்ச திசநாயக்க | 35,537 | (0.26%) |
| அஜந்த பெரேரா | 27,572 | (0.21%) |
| றோகண பல்லேவத்த | 25,173 | (0.19%) |
| எஸ்.அமரசிங்க | 15,285 | (0.12%) |
| மில்றோய் பெர்னான்டோ | 3,641 | (0.10%) |
| எம்.கே.சிவாஜிலிங்கம் | 12,256 | (0.09%) |
| பத்தரமுல்ல சீலரத்தன | 11,879 | (0.09%) |
| அஜந்த டி சொய்சா | 11,705 | |
| அனுருத்த பொல்கம்பொல | 10,219 | |
| நாமல் ராஜபக்ச | 9,497 | |
| கேதாகொட ஜெயந்த | 9,467 | |
| துமிந்த நாகமுவ | 8,219 | |
| அபரக்கே புஞ்ஞானந்த தேரோ | 7,611 | |
| சுப்ரமணியம் குணரத்தினம் | 7,333 | |
| ஏஎஸ்பி லியனகே | 6447 | |
| பியசிறி விஜயநாயக்க | 4636 | |
| அனுர டி சொய்சா | 4218 | |
| ரஜீவ விஜேசிங்க | 4146 | |
| முகமட் இலியாஸ் | 3987 | |
| சிறிதுங்க ஜயசூரிய | 3944 | |
| சரத் கீர்த்திரத்தின | 3599 | |
| சரத் மனமேந்திர | 3380 | |
| பானி விஜேசிறிவர்த்தன | 3014 | |
| அசோக வடிகமங்காவ | 2924 | |
| ஏஎச்எம் அலவி | 2903 | |
| சமன் பெரேரா | 2368 | |
| பிஎம் எதிரிசிங்க | 2139 | |
| சமரவீர வீரவன்னி | 2067 | |
| பத்தேகமகே நந்திமித்ர | 1841 | |
| சமன்சிறி | 976 | |
| செல்லுபடியான வாக்குகள் | 3,252,499 | (98.99%) |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 135,452 | (1.01%) |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 13,387,951 | (83.72%) |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 5,992,096 | |

## பங்காளிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் பதவியில் இருந்து விலகி வழிவிடுமாறு பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கோரியபோதும் அதற்கு இணங்க மறுத்துவிட்டார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

தேவையெனில் நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்குச் செல்லுமாறு அவர் அங்கு கூறியுள்ளார்.

இந்தத் தகவலை அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று இரவு தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நடந்த நிகழ்வில் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ஹக்கீம் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதியாக கோட்டாபய தெரிவாகியுள்ள நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்காக நேற்று மாலை அமைச்சரவை கூடியது. இதன் போது, தேர்தலில் கோட்டாபய அமோக வெற்றியீட்டியுள்ளமையால் அவர்கள் ஆட்சியமைப்பதற்கு வசதியாக பிரதமர் பதவியில் இருந்து விலகி வழிவிடுமாறு பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் ரணிலிடம் வலியுறுத்தினர்.

ஆயினும் அவர் அதற்கு இணங்க மறுத்துவிட்டார்.

தேவையெனில் நாடாளுமன்றைக் கலைத்துப் பொதுத் தேர்தலை நடத்துமாறு அவர் கூறியுள்ளார். அவர் தொடர்ந்தும் பிரதமர் பதவியில் இருப்பது பொருத்தமானதல்ல. ஆகவே இது தொடர்பில் சபாநாயகர் தலைமையில் நடைபெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஆராயவுள்ளோம் – என்றார். (ஜ)

## மோடியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யூடாக தொடர்புகொண்டு வாழ்த்தினார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி .

பாரம்பரிய தொடர்புகள் கொண்ட இரு நாட்டு உறவுகள் மேம்பட ஒன்றுபட்டு செயற்பட வேண்டியதன் அவசியத்தை இதன் போது வலியுறுத்திய மோடி, இந்தியா வருமாறும் கோட்டாபயவுக்கு அழைப்பு விடுத்தார்.

இந்திய பிரதமரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட கோட்டாபய விரைவில் புதுடில்லி வருவதாக உறுதியளித்தார் என அறிய முடிந்தது. (ஜ)

## பாதுகாப்பான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமிழ் மக்கள் பாதுகாப்பான ஒரு சூழலை விரும்புகின்றார்கள் எனவும், தேர்தல் முடிவுகள் இந்நாட்டு மக்கள் இன ரீதியாக இரு துருவங்களாகப் பிரிந்திருப்பதை வெளிக்கொண்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சி.வீ.விக்கேஸ்வரன் நேற்று வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தச் செய்தியில், நாட்டில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் இந்நாட்டு மக்கள் இன ரீதியாக இரு துருவங்களாகப் பிரிந்திருப்பதை வெளிக்கொண்டு வந்துள்ளது.

இந்நாட்டில் இனப் பிரச்சினை ஒன்றிருப்பதை தெட்டத்தெளிவாக இது எடுத்துக் காட்டுகின்றது. அத்துடன் தமிழ் மக்கள் 10 வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற யுத்தத்தின்போது இழைக்கப்பட்ட கொடுமைகளையும் அநீதிகளையும் இன்னமும் மறக்கவில்லை என்பதையும் அவர்கள் பாதுகாப்பான ஒரு சூழலை விரும்புகின்றார்கள் என்பதையும் வாக்களிப்புப் புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டியுள்ளன.

பெரும்பான்மையின மக்களின் வாக்குகளை மையமாக வைத்து ஜனாதிபதித் தேர்தலை வெல்ல முடியும் என்று எடுத்துக் காட்டியிருக்கும் இலங்கையின் 7ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள புதிய ஜனாதிபதி, நாட்டில் உள்ள எல்லா இன மக்களினதும் அடையாளம், பாரம்பரியம், உரிமை மற்றும் சுதந்திரம் போன்றவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பையும் தாம் வெகுவாகத் தம்பால் ஈர்த்துள்ளார் என்பதை உணர வேண்டும்.

ஒரு தரப்பாரின் வாக்குகளால் பதவி கிடைத்தாலும் ஜனாதிபதி பதவிப் பொறுப்பு என்பது நாட்டின் சகல இன மக்களையும் அவர்களின் பிரச்சினைகள், பொறுப்புக்கள், நலன்களையும் தம்மால் கொண்டுள்ளது என்பதை நாம் மறந்தல் ஆகாது.

பெரும்பான்மை சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்று வந்த ஒரு சிங்களத் தலைவர் என்ற முறையில் தமிழ் மக்களின் நீண்டகால அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளைத் துணிச்சலான முறையில் அணுகி அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தீர்வு ஒன்றைப் பெற்றுத் தருவதன் ஊடாக இந் நாட்டின் எல்லா மக்களுக்கும் வளமானதும் சுமூகமானதும் சுபீட்சமானதுமான எதிர்காலத்தை அவர் வெகுவிரைவில் கட்டியெழுப்புவார் என்று எதிர்பார்க்கின்றேன் எனக் குறிப்பிட்டுள்ளார். (ஜ)

## எதிர்பார்த்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைவரும் அமைதியான முறையில் கொண்டாடவேண்டும் என பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மாறுபட்ட வழிமுறைகளில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்டன. நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆரம்பத்தில் இருந்து உதவி வழங்கிய வர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ள வேண்டும்.

அச்சமின்றிய விதத்தில் அனைவரும் தேசிய பாதுகாப்புடன் வாழும் சூழல் இனி தோற்றுவிக்கப்படும். ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கோட்டாபய ராஜபக்ஷ அதற்காக செயற்பாடுவார். வெற்றியை அடைவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் தொடர்ந்து அவசியமாகக் காணப்படுகின்றது.

அத்தோடு கடந்த காலங்களில் நாட்டில் இருண்ட யுகம் காணப்பட்டது. குறிப்பிட்ட தரப்பினர் மாத்திரமல்லாமல் அனைவரும் அனைத்து விடயங்களிலும் முன்னேற்றமடைவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்போம் – என்றார். (ஜ)

## பொதுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

பிரதமர் வெளியிட்டுள்ள சிறப்பு அறிக்கையிலேயே இதனைச் சுட்டிக்காட்டினார்.

சபாநாயகர் தலைமையில் அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றக் கட்சிகளின் தலைவர்களை உள்ளடக்கிய கூட்டத்தைக் கூட்டி நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்குச் செல்வதற்கான தீர்மானம் எடுக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதில் குறிப்பிட்டார்.

நாட்டின் 7ஆவது ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் நாடாளுமன்றின் அங்கீகாரத்துடன் நாடாளுமன்றைக் கலைத்து பொதுத் தேர்தலுக்குச் செல்ல பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யோசனை முன்வைத்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் மார்ச் மாதம் நடுப் பகுதிக்குப் பின்னரே ஜனாதிபதி நாடாளுமன்றைக் கலைக்க முடியும். எனினும் பொதுத் தேர்தலுக்குச் செல்லும் பிரேரணை நிறைவேற்றப்பட்டால் நாடாளுமன்றை நான்கரை ஆண்டுகளுக்கு முன்பே கலைக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ)

## ஐ.தே.கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹரீன் பெர்னாண்டோ, மலிக் சமரவிக்கிரம, ருவான் விஜேவர்தன, கபீர் காசிம் ஆகியோரே தமது அமைச்சுப் பதவிகளில் இருந்தும் கட்சிப் பொறுப்புகளில் இருந்தும் விலகுவதாக அறிவித்துள்ளனர்.

சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க முன்னின்ற அமைச்சர்களே தமது அமைச்சுப் பதவிகளிலிருந்து விலகியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கைகள் மீதான அதிருப்தியிலேயே கட்சியின் உயர் பதவிகளில் இருப்போர் விலகுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நிதி அமைச்சர் மங்கள சமரவீர, ஹரின் பெர்னாண்டோ, மலிக் சமரவிக்ரம, கபீர் ஹாசிம் ஆகியோர் தமது அமைச்சுப் பதவிகளைத் நேற்று மாலை துறந்துள்ளனர்.

அத்துடன், அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சரான அஜித் பெரேராவும் பதவி விலகுகிறார் என அறிவித்துள்ளார்.

மேலும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் அமைச்சரவை அந்தஸ்து இல்லாத ஊடகத் துறை அமைச்சரான ருவான் விஜயவர்தனவும் அமைச்சுப் பதவியிலிருந்து விலகுவதாக பிரதமருக்கு அறிவித்துள்ளார்.

அமைச்சர்கள் ஒவ்வொரு வரும் பதவி விலகலை அடுத்தடுத்து அனுப்பிவைக்கும் நிலையில் பிரதமர் தனது பதவியைத் துறந்தால் அமைச்சர்கள் அனைவரது பதவிகளும் இல்லாமல் போகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ)

## வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றார்கள். அந்தச் செய்தியை அல்லது அவர்கள் மூலம் வழங்கப்பட்டிருக்கும் ஆணையை புதிய ஜனாதிபதி கருத்திற்கொண்டு செயற்படுவார் என்று நம்புகின்றோம் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையின் 08ஆவது ஜனாதிபதியாக நியமிக்கப்படவுள்ள கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலிலே வடக்கு – கிழக்கு மக்கள் – குறிப்பாக நாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் – மக்கள் அமோகமாக வாக்களித்திருக்கின்றார்கள்.

2015ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளைப் பின்தள்ளியவர்களாக வடக்கு–கிழக்கின் எல்லா மாவட்டங்களிலும் அதிகூடிய வாக்குகளை அளித்திருக்கின்றார்கள்.

இன்னுமொரு செய்தியாக தென்னிலங்கையில் நான்கு லட்சம் அளவில் வாக்குச் சரிவு ஏற்பட்டிருக்கின்ற அதேவேளையில், எமது மக்களின் வாக்களிப்பு வீதம் பாராட்டத்தக்க அளவு அதிகரித்துள்ளது.

இதற்காக எமது மக்களுக்கு எங்களுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், எமது ஏனைய ஆதரவாளர்கள் உட்பட அவர்களால் நெறிப்படுத்தப்பட்ட எமது அருமை வாக்காளர்கள் எல்லோருக்கும் இந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை பிற்பகல் ஒரு மணி வரை மந்தகதியில் இருந்த வாக்களிப்பு வீதத்தைத் திடீரென உயர்த்தி எல்லோரது கவனத்தையும் நமது மாவட்டத்தின்பால் ஈர்த்த அத்தனை பேருக்கும் வாழ்த்துக்கள்.

வடக்கு – கிழக்கு மக்கள் இந்த ஜனாதிபதித் தேர்தலிலே நமது இந்த வாக்களிப்பின் மூலம் பிரத்தியேகமான செய்தி ஒன்றை பதவியேற்கவுள்ள ஜனாதிபதிக்குச் சொல்லியிருக்கின்றார்கள். அந்தச் செய்தியை அல்லது அவர்கள் மூலம் வழங்கப்பட்டிருக்கின்ற ஆணையை புதிய ஜனாதிபதி கருத்திற்கொண்டு செயற்படுவார் என்று நம்புகின்றோம்.

இனி நாட்டின் ஜனாதிபதி என்ற ரீதியிலே மக்களுடைய ஆணையை மதித்து புதிய ஜனாதிபதி இந்த நாட்டின் சகல பாகங்களுக்கும் சுபீட்சம் அளிக்கும் வகையில் தனது செயற்பாடுகளை மேற்கொள்வார் என்ற நம்பிக்கையோடு, எமது மக்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்து நியமிக்கப்படவுள்ள ஜனாதிபதிக்கு மீண்டும் எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம் – என்றுள்ளது. (ஜ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online

## சிறுபான்மை இனத்தவர்கள் ஒன்றுபடுவது காலத்தின் கட்டாயம்

கருத்து மோதல்களையும் பிரசார ரணகளத்தையும் ஏற்படுத்திய இலங்கை ஜனாதிபதித் தேர்தல் முடிவுக்கு வந்துவிட்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளரான கோட்டாபய ராஜபக்ஷ தாராள பெரும்பான்மையுடன் தெரிவாகி விட்டார்.

நாட்டின் அதிகாரம் மீண்டும் ராஜபக்ஷக்கள் குடும்பத்தின் வசமாகின்றது.

2005 முதல் 2015 வரை சுமார் பத்து ஆண்டு காலம் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் மிக மோசமான இருண்ட யுகத்தைச் சந்தித்த தமிழர்களைப் பொறுத்த வரை அந்த இருண்ட யுக ஆட்சியில் மிகக் கொடுங்கோலராகத் தாம் கண்ட ஒருவரின் கைகளுக்கு நாட்டின் அதிகாரத் தலைமை செல்வது சிம்ம சொப்பன பயத்தைத்தான் தந்து நிற்கின்றது என்பது மறுக்கப்பட முடியாத நிஜம்.

2005 – 2015 நிலைமையுடன் ஒப்பிடும்போது இப்போது தாங்கள் சட்டியில் இருந்து அடுப்புக்குள் விழுகின்றோம் என்பது போன்ற அச்ச உணர்வே தமிழர்கள் மனதில் வியாபித்து நிற்கின்றது.

அந்த அச்ச – பீதி – பய உணர்வின் வெளிப்பாடாகத்தான் நேற்று முன்தினம் நடந்த தேர்தலின் வாக்களிப்பு முடிவு – குறிப்பாகத் தமிழர் தேசத்தின் வாக்களிப்பு முடிவு – அமைந்திருக்கின்றமை மறுக்க முடியாத உண்மை.

தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் என சிறுபான்மை இனத்தவர்கள் எல்லாம் ஒருபுறம். பௌத்த, சிங்களப் பெரும்பான்மையினர் எல்லாம் மறுபுறம் என இந்தத் தேர்தல் முடிவு நாட்டைத் தேசியங்கள் ரீதியாகப் பிரித்துப் போட்டிருக்கின்றது.

இலங்கைத் தீவு சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் என இரண்டு பிரிவுகளாகத் துருவமயப்பட்டு பிரிந்து கிடக்கின்றது என்பதை உறுதிப்படுத்தி வெளிப்படுத்தியிருக்கின்றது இந்தத் முடிவு என்பதும் கணக்கில் எடுக்கப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.

அடக்கி ஒடுக்கப்படுகின்ற மக்கள் கூட்டமாக வடக்கு – கிழக்குத் தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் மலையக மக்கள் ஒரு புறம்.

அடக்குகின்ற பேரினவாதிகளான பௌத்த, சிங்களவர்கள் மறுபக்கத்தில்.

இந்த நாட்டில் அல்லற்பட்டு, அடக்கி, ஒடுக்கப்பட்டு, அந்ரிக்கும் தரப்புகளான சிறுபான்மையினரை இந்தத் தேர்தல் ஒரு புறத்தில் அணி சேர வைத்திருக்கின்றது என்பது இந்தத் தேர்தலினால் கிடைத்த ஒரு நன்மையான பெறு பேறுதான்.

ஆனால், பாதிக்கப்பட்டு நிற்கும் சிறுபான்மை இனம், அந்தப் பாதிப்புக்காகத் தனக்குள் ஒன்று கூடி, ஒருமைப்பட்டு நிற்காமல், இன்னொரு பேரினவாதத் தலைமையின் பின்னால் ஒன்றுபட நேர்ந்தமை சிறுபான்மையினத்தவர்களின் துரதிஷ்டமே.

இந்த அவலத்தில் இருந்து சிறுபான்மையினரான நாம் வெளியே வர வேண்டும்.

சிங்கள, பௌத்த பேரினவாத தேசத்தின் தேர்தலில் எமது வாழ்வியல் உரிமைகளை நிலைநாட்டுவதற்காக அக்கட்சிகளின் பிரதிநிதி ஒருவர் பின்னால் சிறுபான்மையினரான நாங்கள் ஒன்று திரள்வதை விடுத்து, நாமாக ஏன் ஒன்றிணையக் கூடாது?

அதுவும், பௌத்த – சிங்களப் பேரினவாதத்தின் குறியீடாகத் திகழக் கூடிய தரப்புகளின் கைகளிலேயே ஆட்சி அதிகாரத்தை சிங்கள மக்கள் தூக்கி ஒப்படைத்திருக்கும் இந்த நிலையில் சிறுபான்மையினரான நாங்கள் – தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்களாகிய நாங்கள் – எமது எச்ச சொச்ச உரிமைகளையும், தாயக மண்ணையும் காப்பாற்றிக் காபந்து பண்ணுவதற்காகவேனும் ஏன் ஒற்றுமைப்பட்டு நிற்கக் கூடாது?

இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒற்றை இலக்குக்காக, தனித்தனி வழி நின்று, ஒரே பக்கமாக வாக்களித்தமை மூலம் உலகுக்கு ஒன்றுபட்டுக் காட்டிய நாம், உண்மையில் எங்கள் இனங்களின் பாதுகாப்புக்கும், வலிமைக்குமாக ஏன் ஒன்றுபடக் கூடாது?

முதல் கட்டமாக, ஏற்கனவே அமைச்சர் மனோ கணேசன் பிரேரித்த வகையில் **'தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அமையம்'** என்பது போன்ற ஒரு கட்டமைப்பு ஊடாக எமது ஐக்கிய இணைவை ஏன் ஆரம்பிக்கக் கூடாது?

தென்னிலங்கையில் பேரினவாதத்தைப் பிரதிபலிக்கும் சக்திகளின் கைகளில் நிறைவேற்று அதிகாரம் சிக்கியுள்ள நிலையில் சிறுபான்மையினரான நாம், எங்கள் இனங்களின் தனித்துவம், இருப்பு, வாழ்வியல் ஆகியவற்றைத் தக்க வைப்பதற்காக ஒன்றிணைந்து, ஐக்கியப்பட்டுச் செயற்படுவது காலத்தின் கட்டாயம்.

தமிழ் பேசும் மக்களின் தலைவர்கள் இதனைப் புரிந்து கொள்வார்களா? இந்த விடயத்தில் அவசரமும் அவசியமும் உணர்ந்து, காத்திரமாகச் செயற்பட அவர்கள் முன்வந்தால் அது வரவேற்கத்தக்க – பாராட்டத்தக்க – துணிச்சலான – ஒரு காரியமாக அமையும். செய்வார்களா?

# சிவாஜி, அநுரவை விடவும் வடக்கில் அதிக வாக்கு அள்ளிய ஆரியவன்ஸ!

கொழும்பு, நவ. 18

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அதிக கவனத்தை ஈர்த்தவர் ஆரியவன்ஸ திசாநாயக்க என்பவரே.

ஏனென்றால் இவர் வடக்கில் அதிக வாக்குகளைப் பெற்றுள்ளார். அநுரகுமார திஸாநாயக்க, சிவாஜிலிங்கத்தை விடவும் இவர் அதிக வாக்குகளில் முன்னிலை பெற்றுள்ளார்.

குறிப்பாக காங்கேசன்துறை தொகுதியில் அவர் 586 வாக்குகளையும், ஊர்காவற்றுறைத் தொகுதியில் 382 வாக்குகளையும், சாவகச்சேரித் தொகுதியில் 656 வாக்குகளையும், யாழ்ப்பாணத்தில் 288 வாக்குகளையும், யாழ். தபால் மூல வாக்களிப்பில் 121 வாக்குகளையும், கிளிநொச்சியில் 1041 வாக்குகளையும், மானிப்பாயில் 790 வாக்குகளையும், நல்லூரில் 659 வாக்குகளையும், கோப்பாயில் 897 வாக்குகளையும், பருத்தித்துறையில் 431 வாக்குகளையும், உடுப்பிட்டியில் 529 வாக்குகளையும், வட்டுக்கோட்டையில் 594 வாக்குகளையும் அவர் பெற்றுள்ளார்.

அவர் எப்படி இந்த நிலையை எட்டினார்? என்பது குறித்து அனைவர் மத்தியிலும் கேள்வி எழுந்துள்ளது.

அவரது சின்னம் கழுகு என்பதால், அன்னப் பட்சிக்கும், கழுகுக்கும் வித்தியாசம் தெரியாமல் அவருக்கு புள்ளடியிட்டிருக்கலாமென அரசியல் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ)

# சாய்ந்தமருதில் முறுகல் நிலை



மட்டக்களப்பு, நவ. 18

ஜனாதிபதித்தேர்தலின் முடிவுகள் வெளியிடப்பட்டதை அடுத்துசாய்ந்தமருது மக்களின் வெற்றிக் கொண்டாட்டத்தில் முறுகல் நிலை ஏற்பட்டது.

புதிய ஜனாதிபதி கோட்டாபயவின் வெற்றியை சாய்ந்தமருது மக்கள், இளைஞர்கள் ஒன்று கூடிக் கொண்டாடினர். அத்தோடு கோட்டாபயவின் ஒளிப்படம் தாங்கிய பதாதைகளை ஏந்திக் கொண்டு மோட்டார் சைக்கிளிலும் பேரணியாகச் சென்றனர். இதன்போதே சில குழுவினரால் அவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலை தடுக்க முற்பட்டவேளை அந்த பிரதேசத்தில் அமைதியின்மை உருவாகியதுடன் சம்பவ இடத்துக்கு கல்முனை பொலிஸார் வரவழைக்கப்பட்டனர்.

பின்னர் பிரச்சினை சுமுகமடைந்ததை அடுத்து வெற்றிக்கொண்டாட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டதுடன், பிரதேச பொது மக்கள் உள் வீதி எங்கிலும் பட்டாசு கொழுத்தி கொண்டாடினர். வீதியால் வந்த அனைத்துப் பிரயாணிகளுக்கும் இனிப்புப் பண்டங்களும் வழங்கப்பட்டன. (ஐ)

# மறந்து போயுள்ள மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்கு விரைந்து நடவடிக்கை எடுங்கள்!

## புதிய ஜனாதிபதியிடம் தேர்தல் ஆணையத் தலைவர் கோரிக்கை





புதிய ஜனாதிபதியிடம் இறுதியாக ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன் எனக் குறிப்பிட்டு மறந்து - மறந்து - போயுள்ள மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்து ஜனநாயகத்தை உறுதிப்படுத்துமாறும் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய வேண்டுகோள் விடுத்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியதன் பின்னர் இறுதியாக இந்த வேண்டுகோளை அவர் விடுத்தார்.

ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டது போன்று புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவர் செயற்படுவார் என்ற எதிர்பார்ப்பு நாட்டு மக்களிடம் காணப்படுவதாகவும் அவர் தனது உரையில் மேலும் குறிப்பிட்டார்.

வடமாகாண மரம் நடுகை மாதம்
கார்த்திகை - 2019
"மரங்களின் பிரதான தொழிற்பாடுகள் புரிந்து கொள்ளப்பட்டு அவை உயிர்வாழ் அங்கிகளாக எம்மால் உணரப்பட்டால், அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக்கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும்."
ஹ.தி.மிரோவ் (அமெரிக்க எழுத்தாளர்)

நாளை
20.11.2019
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம்: ஆயிலியம் மு.இ 8.20 வரை
திதி : பஞ்சமி பி.ப 1.59 வரை
இராகுகாலம் : 3.09 – 4.39
சுப நேரம் : 10.39 – 12.09

# சிரியாவில் கார்க் குண்டு வெடிப்பு 18 பேர் சாவு; 27 பேர் படுகாயம்!






சிரியாவின் வடக்கு எல்லை நகரமான அல் – பாப்பில் இடம் பெற்ற இரட்டைக் கார் வெடிகுண்டுத் தாக்குதலில் குறைந்த பட்சம் 18 பொது மக்கள் உயிரிழந்துள்ளமையுடன், மேலும் 27 பேர் காயமடைந்துள்ளனர் என துருக்கிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்த தாக்குதல் காரணமாக பல கார்களும் கட்டடங்களும் சேதமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## கியூபாவின் தலைநகரான ஹவானாவின் 500 ஆவது ஆண்டு விழாக் கோலாகலம்!




கியூபா தலைநகர் ஹவானாவின் 500 ஆவது ஆண்டு விழா, கோலாகலமாக கொண்டாடப்பட்டது. ஹவானா நகர் கடந்த 1519ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் திகதி உருவாக்கப்பட்டது எனக் கூறப்படுகின்றது.

கட்டடங்கள் மற்றும் அவற்றின் கலைநுட்பங்கள் காரணமாக, உலகின் எழில்மிகு நகரங்களில் ஒன்றாக இது பார்க்கப்படுகிறது. இந்நிலையில் ஹவானாவின் 500 ஆவது ஆண்டு விழா, வண்ணமயமான வாண வேடிக்கைகளுடன் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

ஹவானாவின் மோரோ கோட்டையின் மீது நடந்த வாண வேடிக்கை நிகழ்ச்சியை ஏராளமானோர் கண்டு ரசித்தனர்.


## நவாஸ் ஷெரீப் சிகிச்சைக்காக லண்டன் செல்ல பாகிஸ்தான் நீதிமன்றம் அனுமதி

முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் சிகிச்சை பெறுவதற்காக லண்டன் செல்வதற்கு அனுமதி அளித்து பாகிஸ்தான் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் ஊழல் வழக்கில் சிறை தண்டனை பெற்று லாகூர் சிறையில் அடைக்கப்பட்டார். அங்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டதால் சிகிச்சைக்காக அவருக்குப் பிணை வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அவர் தனது வீட்டில் தங்கி சிகிச்சை பெற்று வருகிறார். அவர் சிகிச்சை பெற லண்டன் செல்வது நல்லது என டாக்டர்கள் அறிவுறுத்தினர்.

ஆனால் வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டவர்கள் பட்டியலில் நவாஸ் ஷெரீப் பெயர் உள்ளதால் அவர் லண்டனுக்கு செல்வதில் சிக்கல் எழுந்தது. இந்தப் பட்டியலில் இருந்து அவரது பெயரை நீக்கி, லண்டனுக்குச் சென்று வர ரூ.700 கோடிக்கு (இந்தியப் பெறுமதியில்) சமதையான உறுதிமொழிப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும் என்பது உள்பட சில நிபந்தனைகளை நவாஸ் ஷெரீப்புக்கு இம்ரான்கான் அரசு விதித்தது.

ஆனால் இந்த நிபந்தனையை ஏற்க மறுத்த நவாஸ் ஷெரீப், இது தொடர்பாக லாகூர் உயர்நீதி மன்றத்தில் மேன்முறைண்ட்டு மனு தாக்கல் செய்தார். 2 நீதிபதிகள் கொண்ட அமர்வு நேற்றுமுன்தினம் இதனை விசாரித்தது.



அப்போது வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டவர்களின் பட்டியலில் இருந்து எந்த வித நிபந்தனைகளும் இன்றி நவாஸ் ஷெரீப் பெயரை நீக்க பாகிஸ்தான் அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. மேலும், அவர் சிகிச்சைக்காக லண்டன் செல்ல 4 வாரங்கள் அனுமதி வழங்கும்படியும் இம்ரான்கான் அரசுக்கு அதிரடியாக நீதிமன்றம் உத்தரவிட்டது.

லண்டனில் நவாஸ் ஷெரீப்புக்கு சிகிச்சை அளிக்க உள்ள டாக்டர்கள் அளிக்கும் அறிக்கையைப் பொறுத்து இந்தக் கால அளவு மேலும் நீடிக்கப்படலாம் என கூறப்படுகிறது.

## வெனிசுலா அதிபருக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமாகின்றது




வெனிசுலா அதிபருக்கு எதிரான போராட்டங்களை முடுக்கி விடுமாறு அந்நாட்டு எதிர்கட்சித் தலைவரான ஜுவான் கெய்டோ தமது ஆதரவாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

வெனிசுலாவின் அதிபரான நிகோலஸ் மதுரோவுக்கு எதிராக, அந்நாட்டு எதிர் கட்சியினர் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்நிலையில் வெனிசுலாவின் தலைநகரான காரகாஸில் (Caracas) நடைபெற்ற பேரணியில் பேசிய எதிர்கட்சி தலைவரான கெய்டோ, அதிபர் மதுரோ ஒரு சர்வாதிகாரி என்று சாடினார்.

## ஹொங்கொங்கில் சீன இராணுவம் களமிறக்கம்!

ஹொங்கொங்கில் மக்கள் எழுச்சிப் போராட்டம் தொடர்ந்துவரும் நிலையில் தனது இராணுவ வீரர்களை சீனா களம் இறக்கியுள்ளது.

ஹொங்கொங்கில் குற்றவழக்குகளில் சிக்கும் கைதிகளை சீனாவுக்கு நாடு கடத்தி அங்கு விசாரணை செய்ய வகை செய்யும் சட்டப் பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவித்து அங்கு ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் கடந்த 5 மாதங்களாக தொடர்ந்து நடந்து வருகிறது.

போராட்டக்காரர்களை ஒடுக்கும் பணியில் ஹொங்கொங் பொலிஸார் ஈடுபட்டுவருகின்றனர். தொடர் போராட்டத்தால் பல இடங்கள் கற்களும், குப்பை கூளமுமாகக் காட்சியளிக்கின்றன.

இந்நிலையில், சீன இராணுவத்தின் ஹொங்கொங் படைப்பிரிவை சேர்ந்த இராணுவ வீரர்கள் ஹொங்கொங் நகரில் தற்போது களமிறக்கப்பட்டுள்ளனர்.

வழக்கமான சீருடையில் அல்லாமல் டி – சர்ட், சோர்ட்ஸ் அணிந்து தடுப்புகள் மற்றும் குப்பைகளை அப்புறப்படுத்தும் பணிகளில் வீரர்கள் ஈடுபட்டனர். ஹொங்கொங்கில் 5 மாதங்களுக்கு மேலாக நடைபெற்று வரும் போராட்டத்தில் முதல் முறையாக இராணுவம் களமிறக்கப்பட்டுள்ளது.



# இங்கிலாந்து இளவரசர் அண்ட்ரூ மீது பாலியல் புகார்; அப்பெண்ணைத் தான் சந்தித்ததே இல்லை என்கிறார்



லண்டன்,நவ.18

தன் மீது பாலியல் புகார் கூறிய பெண்ணை தான் சந்தித்ததே இல்லை என்று இங்கிலாந்து இளவரசர் அண்ட்ரூ மறுத்துள்ளார்.

இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத், இளவரசர் பிலிப் தம்பதியரின் இளைய மகன் ஆண்ட்ரூ (வயது 59). இவர் இளவரசர் சார்லசுக்கு தம்பியும் ஆவார்.

சாரா என்ற பெண்ணை அண்ட்ரூ திருமணம் செய்து, 1996 ஆம் ஆண்டு விவாகரத்து செய்து விட்டார்.

இவரது நெருங்கிய நண்பராக திகழ்ந்தவர் அமெரிக்காவை சேர்ந்த நிதியாளர் ஜெப்ரி எப்ஸ்டீன். இவர் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன் போன்ற அரசியல் பிரபலங்களுடனும் நெருங்கி உறவாடியவர்.

அதே நேரத்தில் இந்த ஜெப்ரி எப்ஸ்டீன், பாலியல் புகார்களுக்கு பெயர் போனவர். இவர் பாலியல் வழக்கில் சிக்கி கடந்த ஜூலை மாதம் நியூயோர்க் நகரில் வைத்து கைது செய்யப்பட்டார். சிறுமிகளை கரிப்பீயன் தீவில் உள்ள தனது சொகுசு வீட்டிலும், அமெரிக்காவின் பாம் பீச் வீட்டிலும் வைத்து பலாத்காரம் செய்தார் எனக் குற்றச்சாட்டு எழுந்தது.

இதுதொடர்பான வழக்கில் அவர் நியூயோர்க் சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது கடந்த ஓகஸ்டு மாதம் 10 ஆம் திகதி மர்மமான முறையில் இறந்து கிடந்தார். அவர் தற்கொலை செய்து கொண்டார் என அறிவிக்கப்பட்டது.

இந்த ஜெப்ரி எப்ஸ்டீன் மீது பாலியல் புகார் கூறி பரபரப்பை ஏற்படுத்தியவர் அமெரிக்க பெண், ராபர்ட்ஸ் என்று அழைக்கப்பட்ட வெர்ஜினியா கியுப்ரே ஆவார்.



இந்த கியுப்ரே, இங்கிலாந்து இளவரசர் அண்ட்ரூ மீதும் பரபரப்பு பாலியல் புகார்களை கூறி அதிர வைத்தார்.

அப்போது அவர் கூறும்போது ஜெப்ரி எப்ஸ்டீன் என்னுடன் ஆண்டுக்கணக்கில் பாலியல் உறவு வைத்துக்கொண்ட நிலையில், இங்கிலாந்து இளவரசர் அண்ட்ரூ உள்ளிட்ட பணக்கார நண்பர்களுக்கு விருந்து ஆக்கினார் எனக் குறிப்பிட்டார்.

மேலும், இங்கிலாந்து இளவரசர் அண்ட்ரூவுடன் 3 முறை செக்ஸ் உறவு வைத்துக்கொள்ளுமாறு தான் நிர்ப்பந்திக்கப்பட்டார் எனவும் கூறினார்.

இது பற்றி அவர் குறிப்பிடுகையில், அவர் என்ன செய்தார் என்பது அவருக்கு மிகச்சரியாக தெரியும் என்று கூறினார்.



தனது 17 வயதில் இளவரசர் அண்ட்ரூ உடன் லண்டனில் வைத்தும், பின்னர் நியூயோர்க் நகரில் வைத்தும், அதன்பின்னர் கரீபியன் தீவில் வைத்தும் செக்ஸ் உறவு வைத்துக்கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார் என அவர் கூறினார்.

இளவரசர் அண்ட்ரூ, இந்தப் பெண் மீது கைபோட்டுக்கொண்டும், ஜெப்ரி எப்ஸ் டீனின் தோழி ஜிஸ்லைனே மேக்ஸ்வெல் அவர்களின் பின்னால் நிற்கும் படம் ஒன்று வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இப்போது இது தொடர்பாக இளவரசர் அண்ட்ரூ பி.பி.சிக்கு பேட்டி அளித்தார். இந்தப் பேட்டியில் அவர் அப்படி ஒரு பெண்ணைத் தான் சந்தித்தார் என்று தமது நினைவில் இல்லை என்று அவர் கூறி உள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறும் போது, இந்தப் பெண்ணை நான் எப்போதும் சந்தித்ததாக என் நினைவில் இல்லை. எதுவும் இல்லை என்று குறிப்பிட்டார்.

அதே நேரத்தில் தனக்கும் ஜெப்ரி எப்ஸ்டீனுக்கும் இடையே நட்புறவு இருந்ததை ஒப்புக்கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் கூறும் போது, "நான் அவருடன் (ஜெப்ரி எப்ஸ்டீன்) தங்கி உள்ளேன். அதுதான் தவறு... அதற்காக என்னை நான் உதைத்துக்கொள்கிறேன்" – என்று குறிப்பிட்டார்.

மேலும், அரச குடும்ப உறுப்பினர் என்ற வகையில் நாங்கள் உயர்ந்த தரத்தையும், பழக்க வழக்கத்தையும் பின்பற்ற முயற்சித்து வருகிறோம் என்றும் அவர் கூறினார்.

## எரிபொருள் விலை உயர்வினால் ஈரானில் வெடித்தது போராட்டம்

ஈரானில் பெற்றோல், டீசல் விலை உயர்த்தப்பட்டமையைக் கண்டித்து பல்வேறு இடங்களில் போராட்டங்கள் வெடித்துள்ளன.

பெற்றோல், டீசல் விலையை 50 சதவீதம் வரை அந்நாட்டு அரசு நேற்றுமுன்தினம் உயர்த்தியது. இதைக் கண்டித்து, சிர்ஜானில்



போராட்டத்தில் ஈடுபட்டோர், அங்குள்ள பெற்றோல், டீசல் கிடங்குக்கு தீ வைக்க முயற்சித்தனர்.

ஆனால் அவர்களைப் பாதுகாப்புப் படையினர் தடுத்து நிறுத்தினர். இதேபோல் மாசாத், பிர்ஜந்த், காச்சரன் உள்ளிட்ட இடங்களிலும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

## ஆப்கானில் போர்க்குற்றத்தில் ஈடுபட்ட படையினருக்கு டிரம்ப் பொது மன்னிப்பு

வொஷிங்டன்,நவ.18

ஆப்கானிஸ்தானில் போர்க்குற்றத்தில் ஈடுபட்ட 2 அமெரிக்க இராணுவ அதிகாரிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குவதாக டிரம்ப் அறிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தொடங்கிய போர் 19 ஆவது ஆண்டாக நீடித்து வருகிறது. அங்கு ஆட்சியில் இருந்த தலீபான்களை விரட்டியடித்து விட்டாலும் கூட, அமெரிக்க படைகள் அங்கிருந்து தலீபான்களுக்கு எதிராகத் தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

இந்த நிலையில் அங்கு அமெரிக்க படையில் இடம் பெற்று போர் புரிந்து வந்த 2 இராணுவ அதிகாரிகள் போர்க்குற்றங்களில் ஈடுபட்டனர் எனக் குற்றச்சாட்டு எழுந்தது. இது



தொடர்பாக லெப்டினன்ட் ஜெனரல் கிளிண்ட் லோறன்ஸ், மேஜர் ஜெனரல் மத்யூ கோல்ஸ்டீன் ஆகியோர் மீது விசாரணை நடைபெற்றது.

அமெரிக்க படை வீரர்களை நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்த 3 பேரை சுட்டுக் கொல்லும்படி சக வீரர்களுக்கு கிளிண்ட் லோறன்ஸ் உத்தரவிட்டமை தொடர்பில் அவருக்கு 19 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவர் 6 ஆண்டுகளுக்கு மேலாக சிறைத்தண்டனை அனுபவித்து வந்தார். இந்த நிலையில் அவருக்கு பொது மன்னிப்பு வழங்கி அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் உத்தரவிட்டார்.

ஆப்கானிஸ்தானில் பிடிபட்டிருந்த ஒரு தீவிரவாதி வெடிகுண்டு தயாரிப்பதில் வல்லுநராக இருந்து, அமெரிக்கப் படைகளுக்கு அச்சுறுத்தலாக இருந்து வந்ததாக எனக் கூறி அவரை மத்யூ கோல்ஸ்டீன் சுட்டுக்கொன்று விட்டார். அவர் மீது விசாரணை நடந்து வந்தது. இந்த நிலையில் அவருக்கு ஜனாதிபதி டிரம்ப் மன்னிப்பு வழங்கி உள்ளார்.

போர்க்குற்றத்தில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டுக்கு ஆளான கடற்படை அதிகாரி எட்வேட் கல்லாகர் விடுவிக்கப்பட்ட நிலையில், அவருடைய தகுதியைரத்து செய்தமையைத்திரும்ப வழங்கி ஜனாதிபதி டிரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

# ஜனாதிபதித் தேர்தல் - 2019

## திகாமடுல்ல மாவட்டம்

செல்லுபடியாகும் ஒட்டுமொத்த வாக்குகள் : 411,570

| | | |
|---|---|---|
| 259,673 | சஜித் பிரேமதாஸ | 63.09% |
| 135,058 | கோட்டாபய ராஜபக்ஷ | 32.82% |
| 7,460 | அநுர குமார திசாநாயக்க | 1.81% |
| 2,214 | எம்.கே.சிவாஜிலிங்கம் | 0.54% |

## அநுராதபுரம் மாவட்டம்

செல்லுபடியாகும் ஒட்டுமொத்த வாக்குகள் : 580,346

| | | |
|---|---|---|
| 342,223 | கோட்டாபய ராஜபக்ஷ | 58.97% |
| 202,348 | சஜித் பிரேமதாஸ | 34.87% |
| 22,879 | அநுர குமார திசாநாயக்க | 3.94% |
| 1,635 | ஆரியவங்ஷ திசாநாயக்க | 0.28% |

## பதுளை மாவட்டம்

செல்லுபடியாகும் ஒட்டுமொத்த வாக்குகள் : 560,345

| | | |
|---|---|---|
| 276,211 | கோட்டாபய ராஜபக்ஷ | 49.29% |
| 251,706 | சஜித் பிரேமதாஸ | 44.92% |
| 14,806 | அநுர குமார திசாநாயக்க | 2.64% |
| 1,702 | ஆரியவங்ஷ திசாநாயக்க | 0.30% |

## மட்டக்களப்பு மாவட்டம்

செல்லுபடியாகும் ஒட்டுமொத்த வாக்குகள் : 303,221

| | | |
|---|---|---|
| 238,649 | சஜித் பிரேமதாஸ | 78.70% |
| 38,460 | கோட்டாபய ராஜபக்ஷ | 12.68% |
| 13,228 | எம்.கே.சிவாஜிலிங்கம் | 4.36% |
| 2,363 | ஆரியவங்ஷ திசாநாயக்க | 0.78% |

## கொழும்பு மாவட்டம்

செல்லுபடியாகும் ஒட்டுமொத்த வாக்குகள் : 1,368,177

| | | |
|---|---|---|
| 727,713 | கோட்டாபய ராஜபக்ஷ | 53.19% |
| 559,921 | சஜித் பிரேமதாஸ | 40.92% |
| 53,803 | அநுர குமார திசாநாயக்க | 3.93% |
| 10,335 | மஹேஷ் சேனாநாயக | 0.76% |

## காலி மாவட்டம்

செல்லுபடியாகும் ஒட்டுமொத்த வாக்குகள் : 725,358

| | | |
|---|---|---|
| 466,148 | கோட்டாபய ராஜபக்ஷ | 64.26% |
| 217,401 | சஜித் பிரேமதாஸ | 29.97% |
| 27,006 | அநுர குமார திசாநாயக்க | 3.72% |
| 2,542 | மஹேஷ் சேனாநாயக | 0.35% |

## கம்பஹா மாவட்டம்

செல்லுபடியாகும் ஒட்டுமொத்த வாக்குகள் : 1,400,274

| | | |
|---|---|---|
| 839,994 | கோட்டாபய ராஜபக்ஷ | 59.99% |
| 471,368 | சஜித் பிரேமதாஸ | 33.66% |
| 58,954 | அநுர குமார திசாநாயக்க | 4.21% |
| 9,745 | மஹேஷ் சேனாநாயக | 0.70% |

## ஹம்பாந்தோட்டை மாவட்டம்

செல்லுபடியாகும் ஒட்டுமொத்த வாக்குகள் : 421,374

| | | |
|---|---|---|
| 278,804 | கோட்டாபய ராஜபக்ஷ | 66.17% |
| 108,906 | சஜித் பிரேமதாஸ | 25.85% |
| 26,295 | அநுர குமார திசாநாயக்க | 6.24% |
| 845 | அஜந்த பெரேரா | 0.20% |

## கண்டி மாவட்டம்

செல்லுபடியாகும் ஒட்டுமொத்த வாக்குகள் : 934,875

| | | |
|---|---|---|
| 471,502 | கோட்டாபய ராஜபக்ஷ | 50.43% |
| 417,355 | சஜித் பிரேமதாஸ | 44.64% |
| 23,539 | அநுர குமார திசாநாயக்க | 2.52% |
| 3,619 | மஹேஷ் சேனாநாயக | 0.39% |

## களுத்துறை மாவட்டம்

செல்லுபடியாகும் ஒட்டுமொத்த வாக்குகள் : 811,763

| | | |
|---|---|---|
| 482,920 | கோட்டாபய ராஜபக்ஷ | 59.49% |
| 284,213 | சஜித் பிரேமதாஸ | 35.01% |
| 27,681 | அநுர குமார திசாநாயக்க | 3.41% |
| 3,213 | மஹேஷ் சேனாநாயக | 0.40% |

## குருணாகல் மாவட்டம்

செல்லுபடியாகும் ஒட்டுமொத்த வாக்குகள் : 1,126,610

| | | |
|---|---|---|
| 652,278 | கோட்டாபய ராஜபக்ஷ | 57.90% |
| 416,961 | சஜித் பிரேமதாஸ | 37.01% |
| 36,178 | அநுர குமார திசாநாயக்க | 3.21% |
| 3,091 | மஹேஷ் சேனாநாயக | 0.27% |

## மாத்தறை மாவட்டம்

செல்லுபடியாகும் ஒட்டுமொத்த வாக்குகள் : 556,868

| | | |
|---|---|---|
| 374,481 | கோட்டாபய ராஜபக்ஷ | 67.25% |
| 149,026 | சஜித் பிரேமதாஸ | 26.76% |
| 23,439 | அநுர குமார திசாநாயக்க | 4.21% |
| 1,436 | மஹேஷ் சேனாநாயக | 0.26% |

## மொனராகலை மாவட்டம்

செல்லுபடியாகும் ஒட்டுமொத்த வாக்குகள் : 319,604

| | | |
|---|---|---|
| 208,814 | கோட்டாபய ராஜபக்ஷ | 65.34% |
| 92,539 | சஜித் பிரேமதாஸ | 28.95% |
| 11,235 | அநுர குமார திசாநாயக்க | 3.52% |
| 917 | அஜந்த பெரேரா | 0.29% |

## நுவரெலியா மாவட்டம்

செல்லுபடியாகும் ஒட்டுமொத்த வாக்குகள் : 476,864

| | | |
|---|---|---|
| 277,913 | சஜித் பிரேமதாஸ | 58.28% |
| 175,823 | கோட்டாபய ராஜபக்ஷ | 36.87% |
| 5,891 | அநுர குமார திசாநாயக்க | 1.24% |
| 2,130 | ஆரியவங்ஷ திசாநாயக்க | 0.45% |

## பொலன்னறுவை மாவட்டம்

செல்லுபடியாகும் ஒட்டுமொத்த வாக்குகள் : 277,924

| | | |
|---|---|---|
| 147,340 | கோட்டாபய ராஜபக்ஷ | 53.01% |
| 112,473 | சஜித் பிரேமதாஸ | 40.47% |
| 12,284 | அநுர குமார திசாநாயக்க | 4.42% |
| 802 | மஹேஷ் சேனாநாயக | 0.29% |

## புத்தளம் மாவட்டம்

செல்லுபடியாகும் ஒட்டுமொத்த வாக்குகள் : 453,976

| | | |
|---|---|---|
| 230,760 | கோட்டாபய ராஜபக்ஷ | 50.83% |
| 199,356 | சஜித் பிரேமதாஸ | 43.91% |
| 12,912 | அநுர குமார திசாநாயக்க | 2.84% |
| 2,204 | மஹேஷ் சேனாநாயக | 0.49% |

## இரத்தினபுரி மாவட்டம்

செல்லுபடியாகும் ஒட்டுமொத்த வாக்குகள் : 747,671

| | | |
|---|---|---|
| 448,044 | கோட்டாபய ராஜபக்ஷ | 59.93% |
| 264,503 | சஜித் பிரேமதாஸ | 35.38% |
| 18,887 | அநுர குமார திசாநாயக்க | 2.53% |
| 1,662 | அஜந்த பெரேரா | 0.22% |

## திருகோணமலை மாவட்டம்

செல்லுபடியாகும் ஒட்டுமொத்த வாக்குகள் : 231,410

| | | |
|---|---|---|
| 166,841 | சஜித் பிரேமதாஸ | 72.10% |
| 54,135 | கோட்டாபய ராஜபக்ஷ | 23.39% |
| 3,730 | அநுர குமார திசாநாயக்க | 1.61% |
| 1,101 | ஆரியவங்ஷ திசாநாயக்க | 0.48% |

## வன்னி மாவட்டம்

செல்லுபடியாகும் ஒட்டுமொத்த வாக்குகள் : 212,778

| | | |
|---|---|---|
| 174,739 | சஜித் பிரேமதாஸ | 82.12% |
| 26,105 | கோட்டாபய ராஜபக்ஷ | 12.27% |
| 2,546 | ஆரியவங்ஷ திசாநாயக்க | 1.20% |
| 1,295 | எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் | 0.61% |

## கேகாலை மாவட்டம்

செல்லுபடியாகும் ஒட்டுமொத்த வாக்குகள் : 575,831

| | | |
|---|---|---|
| 320,484 | கோட்டாபய ராஜபக்ஷ | 55.66% |
| 228,032 | சஜித் பிரேமதாஸ | 39.60% |
| 15,043 | அநுர குமார திசாநாயக்க | 2.61% |
| 1,711 | மஹேஷ் சேனாநாயக | 0.30% |

(08 ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikathir



# ஜனாதிபதித் தேர்தல் - 2019 - யாழ் மாவட்ட தொகுதிகள்

## மனிப்பாய்

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | 31,369 |
| கோட்டாபய ராஜபக்ஷ | 1,859 |
| அநுரியவங்ஷ திசாநாயக்க | 790 |
| எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் | 534 |

## கோப்பாய்

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | 30,835 |
| கோட்டாபய ராஜபக்ஷ | 1,858 |
| அநுரியவங்ஷ திசாநாயக்க | 897 |
| எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் | 462 |

## நல்லூர்

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | 27,605 |
| கோட்டாபய ராஜபக்ஷ | 1,836 |
| எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் | 659 |
| அநுரியவங்ஷ திசாநாயக்க | 475 |

## காங்கேசன்துறை

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | 23,773 |
| கோட்டாபய ராஜபக்ஷ | 1,688 |
| அநுரியவங்ஷ திசாநாயக்க | 586 |
| எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் | 475 |

## பருத்தித்துறை

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | 19,931 |
| கோட்டாபய ராஜபக்ஷ | 1,848 |
| எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் | 644 |
| அநுரியவங்ஷ திசாநாயக்க | 431 |

## வட்டுக்கோட்டை

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | 26,238 |
| கோட்டாபய ராஜபக்ஷ | 1,728 |
| எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் | 727 |
| அநுரியவங்ஷ திசாநாயக்க | 594 |

## உடுப்பிட்டி

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | 19,307 |
| கோட்டாபய ராஜபக்ஷ | 1,334 |
| எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் | 942 |
| அநுரியவங்ஷ திசாநாயக்க | 529 |

## சாவகச்சேரி

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | 28,007 |
| கோட்டாபய ராஜபக்ஷ | 1,775 |
| அநுரியவங்ஷ திசாநாயக்க | 656 |
| எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் | 377 |

## யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | 20,792 |
| கோட்டாபய ராஜபக்ஷ | 1,617 |
| எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் | 466 |
| அநுரியவங்ஷ திசாநாயக்க | 288 |

## ஊர்காவற்துறை

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | 11,319 |
| கோட்டாபய ராஜபக்ஷ | 2,917 |
| அநுரியவங்ஷ திசாநாயக்க | 382 |
| எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் | 223 |

## கிளிநொச்சி

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | 55,585 |
| கோட்டாபய ராஜபக்ஷ | 3,238 |
| அநுரியவங்ஷ திசாநாயக்க | 1,041 |
| எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் | 526 |

## தபால் மூல வாக்குகள்

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | 17,961 |
| கோட்டாபய ராஜபக்ஷ | 1,563 |
| எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் | 810 |
| அநுர குமார திசாநாயக்க | 239 |

## மாத்தளை மாவட்டம்

செல்லுபடியாகும் ஒட்டுமொத்த வாக்குகள் : 339,221

| | | |
|---|---|---|
| 187,821 | கோட்டாபய ராஜபக்ஷ | 55.37% |
| 134,291 | சஜித் பிரேமதாஸ | 39.59% |
| 8,890 | அநுர குமார திசாநாயக்க | 2.62% |
| 792 | மஹேஷ் சேனாநாயக | 0.23% |

# யாழ் மாவட்ட வாக்கு முடிவுகள்

| | | |
|---|---|---|
| 312,722 | சஜித் பிரேமதாஸ | 83.86% |
| 23,261 | கோட்டாபய ராஜபக்ஷ | 6.24% |
| 6,845 | எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் | 1.84% |
| 6,790 | அநுரியவங்ஷ திசாநாயக்க | 1.82% |

# மட்டக்களப்பு தொகுதி

## பட்டிருப்பு

| Party | Candidate | % | Votes |
|---|---|---|---|
| NDF | Sajith Premadasa | 83.05% | 54,132 |
| SLPP | Gotabaya Rajapaksa | 12.19% | 7,948 |
| DUNF | Ariyawansha Dissanayake | 1.18% | 767 |
| IND11 | M. K. Shivajilingam | 0.37% | 238 |

## மட்டக்களப்பு

| Party | Candidate | % | Votes |
|---|---|---|---|
| NDF | Sajith Premadasa | 78.13% | 109,449 |
| SLPP | Gotabaya Rajapaksa | 8.99% | 12,594 |
| IND10 | M. L. A. M. Hizbullah | 8.65% | 12,122 |
| NMPP | Anura Kumara Dissanayaka | 1.07% | 1,499 |
| DUNF | Ariyawansha Dissanayake | 0.65% | 913 |
| IND09 | Warnakulasooriya Milroy Surgeus Fernando | 0.37% | 519 |

## கல்குடா

| Party | Candidate | % | Votes |
|---|---|---|---|
| NDF | Sajith Premadasa | 75.96% | 65,847 |
| SLPP | Gotabaya Rajapaksa | 19.22% | 16,663 |
| IND10 | M. L. A. M. Hizbullah | 0.75% | 652 |
| DUNF | Ariyawansha Dissanayake | 0.75% | 648 |
| JSWP | Rohan Pallewatta | 0.4% | 346 |
| NMPP | Anura Kumara Dissanayaka | 0.35% | 300 |

# வன்னித் தொகுதி

## முல்லைத்தீவு

| Party | Candidate | % | Votes |
|---|---|---|---|
| NDF | Sajith Premadasa | 86.19% | 47,594 |
| SLPP | Gotabaya Rajapaksa | 7.7% | 4,252 |
| DUNF | Ariyawansha Dissanayake | 1.63% | 902 |
| IND11 | M. K. Shivajilingam | 0.45% | 251 |

## தபால் மூல வாக்குகள் - வன்னி

| Party | Candidate | % | Votes |
|---|---|---|---|
| NDF | Sajith Premadasa | 79.3% | 8,402 |
| SLPP | Gotabaya Rajapaksa | 16.07% | 1,703 |
| NMPP | Anura Kumara Dissanayaka | 1.39% | 147 |
| IND11 | M. K. Shivajilingam | 1.36% | 144 |

## வவுனியா

| Party | Candidate | % | Votes |
|---|---|---|---|
| NDF | Sajith Premadasa | 77.83% | 65,141 |
| SLPP | Gotabaya Rajapaksa | 16.39% | 13,715 |
| DUNF | Ariyawansha Dissanayake | 1.08% | 901 |
| NMPP | Anura Kumara Dissanayaka | 0.8% | 667 |
| IND11 | M. K. Shivajilingam | 0.62% | 522 |

## மன்னார்

| Party | Candidate | % | Votes |
|---|---|---|---|
| NDF | Sajith Premadasa | 84.73% | 53,602 |
| SLPP | Gotabaya Rajapaksa | 10.17% | 6,435 |
| DUNF | Ariyawansha Dissanayake | 1.1% | 695 |
| IND11 | M. K. Shivajilingam | 0.6% | 378 |

# அம்பறை தொகுதி

## சம்மாந்துறை

| Party | Candidate | % | Votes |
|---|---|---|---|
| NDF | Sajith Premadasa | 86.22% | 57,910 |
| SLPP | Gotabaya Rajapaksa | 10.65% | 7,151 |
| NMPP | Anura Kumara Dissanayaka | 0.85% | 572 |
| IND10 | M. L. A. M. Hizbullah | 0.61% | 410 |

## அம்பாறை

| Party | Candidate | % | Votes |
|---|---|---|---|
| SLPP | Gotabaya Rajapaksa | 64.69% | 89,674 |
| NDF | Sajith Premadasa | 30.47% | 42,241 |
| NMPP | Anura Kumara Dissanayaka | 2.87% | 3,984 |
| SPSL | Ajantha Perera | 0.32% | 442 |

## கல்முனை

| Party | Candidate | % | Votes |
|---|---|---|---|
| NDF | Sajith Premadasa | 83.08% | 47,309 |
| SLPP | Gotabaya Rajapaksa | 12.79% | 7,286 |
| NMPP | Anura Kumara Dissanayaka | 1.25% | 709 |
| IND10 | M. L. A. M. Hizbullah | 1.13% | 644 |

## பொத்துவில்

| Party | Candidate | % | Votes |
|---|---|---|---|
| NDF | Sajith Premadasa | 80.62% | 100,952 |
| SLPP | Gotabaya Rajapaksa | 16.06% | 20,116 |
| NMPP | Anura Kumara Dissanayaka | 0.85% | 1,061 |
| IND10 | M. L. A. M. Hizbullah | 0.57% | 716 |
| DUNF | Ariyawansha Dissanayake | 0.36% | 454 |

## தபால் மூல வாக்குகள் - தம்புள்ள

| Party | Candidate | % | Votes |
|---|---|---|---|
| NDF | Sajith Premadasa | 47.67% | 11,261 |
| SLPP | Gotabaya Rajapaksa | 45.85% | 10,831 |
| NMPP | Anura Kumara Dissanayaka | 4.8% | 1,134 |
| IND10 | M. L. A. M. Hizbullah | 0.62% | 146 |
| NPP | Mahesh Senanayake | 0.24% | 56 |
| IND11 | M. K. Shivajilingam | 0.13% | 30 |

# திருகோணமலை தொகுதி

## மூதூர்

| Party | Candidate | % | Votes |
|---|---|---|---|
| NDF | Sajith Premadasa | 90.15% | 74,171 |
| SLPP | Gotabaya Rajapaksa | 5.99% | 4,925 |
| NMPP | Anura Kumara Dissanayaka | 0.98% | 809 |
| IND10 | M. L. A. M. Hizbullah | 0.61% | 502 |
| DUNF | Ariyawansha Dissanayake | 0.55% | 451 |

## திருகோணமலை

| Party | Candidate | % | Votes |
|---|---|---|---|
| NDF | Sajith Premadasa | 78.02% | 56,594 |
| SLPP | Gotabaya Rajapaksa | 17.67% | 12,818 |
| NMPP | Anura Kumara Dissanayaka | 0.98% | 713 |
| DUNF | Ariyawansha Dissanayake | 0.6% | 438 |
| IND11 | M. K. Shivajilingam | 0.45% | 325 |

## சேருவில

| Party | Candidate | % | Votes |
|---|---|---|---|
| SLPP | Gotabaya Rajapaksa | 49.9% | 31,303 |
| NDF | Sajith Premadasa | 44.96% | 28,205 |
| NMPP | Anura Kumara Dissanayaka | 2.55% | 1,598 |
| DUNF | Ariyawansha Dissanayake | 0.31% | 194 |

## தபால் மூல வாக்குகள் - திருகோணமலை

| Party | Candidate | % | Votes |
|---|---|---|---|
| NDF | Sajith Premadasa | 56.79% | 7,871 |
| SLPP | Gotabaya Rajapaksa | 36.72% | 5,089 |
| NMPP | Anura Kumara Dissanayaka | 4.4% | 610 |

காலைக்கதிர் Kalaikathir



# இந்தியா அணியின் இன்னிங்ஸ் வெற்றி!



பங்களாதேஷ் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில், இந்தியா அணி இன்னிங்ஸ் மற்றும் 130 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், 1 – 0 என்ற கணக்கில் இந்தியா அணி முன்னிலை பெற்றுள்ளது.

அத்தோடு, இந்த வெற்றியின் மூலம் ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடருக்கான 60 புள்ளிகளையும் இந்தியா பெற்றுக்கொண்டது.

ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடருக்கான புள்ளி பட்டியலில், இந்தியா அணி ஆறு போட்டிகளில் விளையாடி அனைத்து போட்டிகளிலும் வெற்றிபெற்று 300 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

இந்தூர் மைதானத்தில் ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய பங்களாதேஷ் அணி, முதல் இன்னிங்ஸிற்காக 150 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, முஷ்பிகுர் ரஹீம் 43 ஓட்டங்களையும், மொமினுல் ஹக் 37 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இந்தியா அணியின் பந்துவீச்சில், மொஹமட் ஷமி 3 விக்கெட்டுகளையும், இசாந்த் சர்மா, உமேஷ் யாதவ், அஸ்வின் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்ஸை தொடங்கிய இந்தியா அணி, 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 493 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை, தனது முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மாயங் அகர்வால் 243 ஓட்டங்களையும், அஜிங்கியா ரஹானே 86 ஓட்டங்களையும், ரவீந்திர ஜடேஜா ஆட்டமிழக்காது 60 ஓட்டங்களையும், செடீஸ்வர் புஜாரா 54 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில், அபு ஜெயிட் 4 விக்கெட்டுகளையும், மெயிடி ஹசன் மற்றும் எபாதத் ஹொாசைன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் சாய்த்தனர்.

இதனைத் தொடர்ந்து, 343 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய பங்களாதேஷ் அணி, 213 ஓட்டங்களுக்குச் சுருண்டது. இதனால் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 130 ஓட்டங்களால் வெற்றியைப் பதிவு செய்தது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக முஷ்பிகுர் ரஹீம் 64 ஓட்டங்களையும், மெயிடி ஹசன் 38 ஓட்டங்களையும், லிடொன் தாஸ் 35 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இந்தியா அணியின் பந்துவீச்சில், மொஹமட் ஷமி 4 விக்கெட்டுகளையும், அஸ்வின் 3 விக்கெட்டுகளையும், உமேஷ் யாதவ் 2 விக்கெட்டுகளையும், இசாந்த் சர்மா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 330 பந்துகளில் எட்டு சிக்ஸர்கள் 28 பவுண்ரிகள் அடங்களாக 243 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட இந்தியாவின் மாயங் அகர்வால் தெரிவுசெய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி, எதிர்வரும் 22ஆம் திகதி கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் பகலிரவு டெஸ்ட் போட்டியாக நடைபெறவுள்ளது.

இரு அணிகளுக்குமே இப்போட்டி முதல் பகலிரவு டெஸ்ட் போட்டி என்பதால், இப்போட்டி மீதான எதிர்பார்ப்பு இரசிகர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது.

# வேகப்பந்து வீச்சாளர்கள் திறனில் உச்சத்தில் உள்ளனர்



பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்டில் சிறப்பாகச் செயல்பட்ட வேகப்பந்து வீச்சாளர்களை கப்டன் விராட் கோஹ்லி புகழ்ந்துள்ளார்.

பங்களாதேஷுக்கு எதிரான முதல் டெஸ்டில் இந்திய வேகப்பந்து வீசாளர்கள் முகமது ஷமி, இசாந்த் ஷர்மா, உமேஷ் யாதவ் ஆகியோர் 14விக்கெட்டுகளை வீழ்த்தி வெற்றிக்கு வித்திட்டனர்.

இது தொடர்பாக, இந்தியக் கப்டன் விராட் கோஹ்லி, எங்களது வேகப்பந்து வீச்சாளர்கள் தங்களது பந்துவீச்சு திறனில் உச்சத்தில் உள்ளனர். இவர்கள் பந்து வீசும்போது, எந்த ஆடுகளமும், நல்ல ஆடுகளமாகவே தோன்றுகிறது. அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

ஒவ்வொரு பகுதிகளிலும் நமது பந்துவீச்சாளர்கள் விக்கெட் எடுக்கிறார்கள். எந்த ஒரு கப்டனும் இத்தகைய வலிமையான பந்து வீச்சைத்தான் விரும்புவார். இது ஒரு கனவு கூட்டணி போன்றது – என்று தெரிவித்துள்ளார்.

சாதனைகளையும், புள்ளி விவரங்களையும் ஒவ்வொருவரும் பார்க்கிறார்கள். அது தொடர்ந்து சாதனை புத்தகத்தில்தான் இருக்கும். நாங்கள் அதில் கவனம் செலுத்துவதில்லை. நாங்கள் இந்திய கிரிக்கெட்டின் தரத்தை மென்மேலும் மேம்படுத்துவதை நோக்கி பயணிக்கிறோம். இதற்காக அடுத்த தலைமுறை வீரர்களை ஊக்கப்படுத்துகிறோம். – என்று குறிப்பிட்டுள்ளார்.

## ரோஜர் பெடரர் அதிர்ச்சி தோல்வி



ஆண்களுக்கான ரென்னிஸ் தொடரான ஏ.ரீ.பி. ரென்னிஸ் தொடரின் அரையிறுதிப் போட்டியில், கிரேக்கத்தின் ஸ்டெபீனோஸ் ஸிட்ஸிபாஸ் வெற்றி பெற்றுள்ளார்.

நேற்று முன் தினம் நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில், உலகின் ஆறாம் நிலை வீரரான கிரேக்கத்தின் ஸ்டெபீனோஸ் ஸிட்ஸிபாஸ், உலகின் மூன்றாம் நிலை வீரரான சுவிஸ்லாந்தின் ரோஜர் பெடரரும் மோதிக் கொண்டனர்.

இரசிகர்களுக்கு உச்ச விறுவிறுப்பை பரிசளித்த இந்தப் போட்டியில், முதல் செற்றை 6 – 3 என ஸ்டெபீனோஸ் ஸிட்ஸிபாஸ் கைப்பற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செற்றிலும் அதே ஆக்ரோ ஆட்டத்தை வெளிப்படுத்திய ஸ்டெபீனோஸ் ஸிட்ஸிபாஸ், செற்றைக் 6 – 4 எனக் கைப்பற்றி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். (ஐ)

# மைதானத்துக்குள் அத்துமீறி நுழைந்த கோஹ்லியின் வெறித்தனமான ரசிகர்





பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் டெஸ்டில், மைதானத்துக்குள் நுழைந்த தனது ரசிகரை விராட் கோஹ்லி அறிவுரை கூறி அனுப்பினார்.

இந்தியா, பங்களாதேஷ் அணிகள் மோதிய முதல் டெஸ்டில் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 130 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது.

இந்நிலையில் நேற்றைய மூன்றாவது நாள் ஆட்டத்தில் கோஹ்லியின் ரசிகர் ஒருவர் மைதானத்துக்குள் நுழைந்தார்.

பாதுகாவலர்களை மீறி மைதானத்துக்குள் ஓடிவந்த அந்த ரசிகர் நேராக கேப்டன் கோஹ்லியின் பாதங்களைத் தொட்டு வணங்கினார். இதைப்பார்த்து அதிர்ச்சியான கோஹ்லி அவரை எழுப்பி அவரின் தோள்பட்டையில் கைபோட்டுக்கொண்டு அவருக்கு அறிவுரை அளித்தார்.

அதற்குள் அந்த ரசிகரை மைதானப் பாதுகாவலர்கள் கூட்டிச்சென்றனர்.

ஆனால் கோஹ்லி அந்த ரசிகரை எதுவும் செய்ய வேண்டாம் என்றும், பாதுகாப்பாக அவரை அங்கிருந்து அழைத்துச் செல்லும் படியும் அவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

அந்த ரசிகரின் உடல் முழுதும் வி. கே – என கோஹ்லியின் சுருக்கமான பெயரை பெயிண்டால் எழுதியிருந்தார்.

அதோடு கோஹ்லியின் ஜெர்சி எண் 18 ஐயும் அந்த ரசிகர் பெயிண்டால் எழுதியிருந்தார். மேலும் அந்த ரசிகரின் முகத்திலும் வி.கே என எழுதப்பட்டிருந்தது.

இதையடுத்து அந்த ரசிகரை பொலிஸார் கைது செய்தனர். அவரிடம் விசாரணை செய்ததில், 22 வயதான அவரின் பெயர் சூரஜ் பிஸ்த் என்பதும், அவர் உத்தரகண்டை சேர்ந்தவர் என்பதும் தெரியவந்தது.

இந்நிலையில் அவர் கூறிய தகவல்களை உறுதி செய்யப்பட்டு, அவர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிசார் தெரிவித்துள்ளனர்.





ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற கோட்டாபய ராஜபக்ஷ நேற்று பிற்பகல் நுகேகொடையில் அமைந்துள்ள வீட்டின் முன்பாக தனது ஆதரவாளர்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தார். (ஐ)

# தோல்வியை ஏற்றார் சஜித்!




கொழும்பு, நவ. 18

தேர்தல் முடிவுகளை ஏற்றுக் கொள்கிறார் எனவும், வெற்றி பெற்றுள்ள கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார் எனவும் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ அறிவித்துள்ளார்.

தமக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றியை தெரிவித்துள்ள சஜித் பிரேமதாஸ, தமக்கு அரசியல் ஆதரவு அளித்தவர்களுக்கும் நன்றி கூறியுள்ளார்.

தோல்விக்குப் பொறுப்பேற்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி தலைவர் பதவியில் இருந்து விலகிக் கொள்கிறார் எனவும் அவர் அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.

அடுத்த கட்ட அரசியல் நடவடிக்கைகள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்கவுள்ளார் எனவும், எவ்வாறாயினும் மக்கள் சேவையை தொடரவுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். (ஐ)

# கிழக்கிலும் சஜித்துக்கு அமோக வெற்றி



கொழும்பு, நவ. 18

ஜனாதிபதித்தேர்தலில் கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும், புதியஜனநாயகமுன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ சுமார் 69 வீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து தொகுதிகளையும், திருகோணமலை மாவட்டத்தில் சேருவில தவிர்ந்த ஏனைய தொகுதிகளையும், அம்பாறை மாவட்டத்தில் திகாமடுல்ல தவிர்ந்த ஏனைய தொகுதிகளையும் சஜித் பிரேமதாஸ கைப்பற்றினார். (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், நவ.18

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**வவுனியா பிரதேசத்தில் -**

ஈரப்பெரியகுளம், நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய பிரதேசம், உளுக்குளம், செட்டிக்குளம் நகர் பிரதேசம், கந்தசாமி நகர், நித்திக்குளம், சண்முகபுரம், கங்கன்குளம், செட்டிக்குளம் வைத்தியசாலை, செட்டிக்குளம்பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம், செட்டிக்குளம் தொலைத்தொடர்பு, புளியங்குளம், காந்திநகர், அரசடிக்குளம், ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில் -**

செம்மண்தீவிலிருந்து நறுவிலிக் குளம் வரை செம்மண்தீவு நீர்பா சன சபை, செம்மண்தீவு Ware House வங்காலை, தோமஸ்புரி, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும், மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# கோட்டாவுக்கு மனோ வாழ்த்து!



கொழும்பு, நவ. 18

புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அமைச்சர் மனோ கணேசன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டரில் பதிவு ஒன்றை இட்டுள்ள அமைச்சர் மனோ, ஜனாதிபதியாகத் தெரிவு செய்யபட்டுள்ள கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எனது வாழ்த்துக்கள். ஜனாதிபதி கோட்டாபய, நம் பொது தாய்நாட்டில், இலங்கையர் அடையாளத்தைப் பலப்படுத்தி, உயர்த்துவார் என நம்புகிறேன் எனக் கூறியுள்ளார். (ஐ)

# 84 வீத வாக்குகளை யாழில் அள்ளிய சஜித்

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ்ப்பாண மாவட்டத்தின் 11 தொகுதிகளுக்குமான தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், சஜித் பிரேமதாஸ 84 வீதமான - 312,722 வாக்குகளைப் பெற்று பெரும் வெற்றியைப் பெற்றுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 21,402 (6.37 வீதம்) வாக்குகள் மாத்திரம் கிடைத்துள்ளன. (ஐ)

# கோட்டாவுக்கு மோடி வாழ்த்து



கொழும்பு, நவ. 18


இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் வலைத்தளத்திலேயே அவர் தனது பதிவை இட்டுள்ளார்.

எங்கள் இரு நாடுகளுக்கும் குடிமக்களுக்கும் இடையிலான நெருக்கமான மற்றும் சகோதரத்துவ உறவுகளை ஆழப்படுத்துவதற்கும், எங்கள் பிராந்தியத்தில் அமைதி, செழிப்பு மற்றும் பாதுகாப்பிற்காகவும் உங்களுடன் நெருக்கமாக பணியாற்ற நான் எதிர்நோக்குகிறேன் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)







வடமாகாண
மரநடுகை மாதம்
கார்த்திகை 1 - 30
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல,
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

காலைக்கதிர்
Kalaikathir



# வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்காக பிரி.நாடாளுமன்றத்தின் முன்னால் போராட்டம்









இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் நிலைமையைக் கண்டறிவதற்காக தொடர்ந்து சுழற்சி முறையி தாயக உறவுகள் நடத்தி வரும் போராட்டம் ஆயிரமாவது நாளை எட்டியமையை ஒட்டி நாடு கடந்த தமிழீழ அரசு பிரித்தானிய நாடாளுமன்றத்துக்கு முன்னால் நேற்றுமுன்தினம் நடத்திய போராட்ட நிகழ்வின் போது எடுக்கப்பட்ட சில படங்கள்.

# கோட்டாவின் ஆட்சியில் யாரும் பழி வாங்கப்படமாட்டார்கள்!

## உறுதியளிக்கிறார் மஹிந்த ராஜபக்ஷ

ஜனாதிபதி கோட்டாபயவின் ஆட்சியில் யாரும் பழி வாங்கப்படவோ, சிரமத்திற்குள்ளாகவோ மாட்டார்கள் எனத் தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

அத்துடன், இந்த ஆட்சிக்காலத்தில் அரசியல் பழிவாங்கலுக்குள்ளானவர்களுக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினதும் கூட்டு எதிரணியினதும் ஜனாதிபதி வேட்பாளரான கோட்டாபய ராஜபக்ஷ இந்த ஜனாதிபதி தேர்தலில் தீர்க்கமான ஒரு வெற்றியைப் பெற்றிருக்கிறார்.

எவருக்குமே அசௌகரியத்தைக் கொடுக்காத வகையில் அமைதியான முறையில் இந்த வெற்றியைக் கொண்டாடுமாறு எமது கட்சியின் தொண்டர்களையும் ஆதரவாளர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தேர்தலில் எமக்குச் சார்பாக தீர்க்கமான முறையில் மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். இன்றைய அரசின் கடந்த ஐந்துவருடகாலச் செயற்பாடுகளே அதற்குக் காரணமாகும். இதனால், எவருக்குமே அசௌகரியத்தைக் கொடுக்காத முறையில் நாம் நடந்துகொள்ள வேண்டியது நாட்டுக்கும் மக்களுக்கும் நாம் செய்யவேண்டிய ஒரு கடமையாகும்.

கடந்த ஐந்து வருடங்களாக இந்த அரசால் கொடுமைக்கும் தொல்லைக்கும் உள்ளாக்கப்பட்ட சகலருக்கும் நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைத் திட்டமொன்றை நாம் முன்னெடுப்போம்.

மக்களின் ஆணையை குறுகிய அரசியல் நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுக்கும் பல்வேறு இனவாத, மதவாதக் குழுக்களுடனான பின்கதவு வழியான உடன்பாடுகளின் ஊடாக மீண்டும் ஒரு தடவை திருடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட 2015 பாணியிலான முயற்சியை தீர்க்கமான முறையில் தோற்கடித்தமைக்காக நாட்டு மக்களுக்கு நான் தலைவணங்குகிறேன்.

அரசியல் நோக்கங்களுக்காக மதவாதத்தையும் இனவாதத்தையும் ஊக்கப்படுத்துகின்ற ஆபத்தான விளையாட்டுகளுக்கு முடிவு கட்ட வேண்டிய நேரம் இப்போது வந்துவிட்டது.

நாம் முன்னெடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் குறித்து வரும் நாள்களில் மக்களுக்கு அறிவிப்போம். இந்தத் தேர்தலில் மக்களினால் எமக்கு வழங்கப்பட்ட தெளிவான ஆணையைக் கருத்திற்கொண்டு நாடாளுமன்ற பாரம்பரியங்களுக்கு இணங்க உகந்த முறையில் இன்றைய அரசாங்கம் செயற்படும் என்று நம்புகிறோம். இது தாய் நாட்டுக்கும் தேசபக்த மக்களுக்கும் கிடைத்த வெற்றியாகும் – என்றுள்ளது. (ஐ)

### 135,499 வாக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சத்து 35 ஆயிரத்து 499 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்பு நேற்று முன் தினம் காலை 7 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெற்றது.

ஒரு கோடி 59 லட்சத்து 92 ஆயிரத்து 96 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

எனினும், ஒரு கோடியே 33 லட்சத்து 87 ஆயிரத்து 951பேரே வாக்குரிமையைப் பயன்படுத்தினர்.

இவற்றில் உரிய வகையில் அளிக்கப்படாத ஒரு லட்சத்து 35 ஆயிரத்து 499 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. இதன்படி செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை ஒரு கோடியே 32 லட்சத்து 52 ஆயிரத்து 499 வாக்குகளாகும். (ஐ)

### எதிராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பேன் என ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ராஜகிரியாவிலுள்ள தேர்தல் செயலக வளாகத்தில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

இந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டியதை இட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

அந்தவகையில் இந்த வெற்றியை பிளாஸ்ரிக் மற்றும் பதாதைகள் எதனையும் பயன்படுத்தாமல் மக்களைக் கொண்டாடுமாறு கோரியிருந்தேன். அதேபோன்று மக்களும் செயற்பட்டமை மேலும் சந்தோசத்தைத் தருகின்றது.

அந்தவகையில் மக்கள் என் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்தமைக்காகவே அவர்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பாடுகளை முன்னெடுப்பேன்.

தேர்தல் காலத்தில் என்னால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளையும் எனது காலத்திலேயே நிச்சயம் நிறைவேற்றுவேன்.

தடைப்பட்ட தேர்தல்களை நடத்துவதற்குத் தேர்தல் ஆணைக் குழுவுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருக்கின்றேன் – என்றார். (ஐ)

### ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண மக்களுடன் இணைந்து வாழ்த்துக்களை கூறிக் கொள்கின்றேன் என்று மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு வெளியிட்டு செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் தனக்கான ஒரு இடத்தை மீள்நிலைநாட்டிக் கொள்வதற்கு புதியதொரு வழிகாட்டலும் தூர நோக்கும் அர்பணிப்பு நிறைந்த கடின உழைப்பும் நமது தாய்நாட்டிற்கு தற்போது தேவையாகவுள்ளது.

இன, மத, அரசியல் பேதமின்றி இலங்கையின் அனைத்து மக்களையும் தனது வெற்றிப் பயணத்தில் இணைத்துக் கொண்டு முன்னோக்கி செல்வதற்கு புதிய ஜனாதிபதிக்கு தைரியமும் நம்பிக்கையும் கிடைப்பதற்கு வடக்கு மாகாண மக்கள் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றேன்

ஜனநாயகம், சமத்துவம் நிறைந்த, வளமான, ஒன்றுபட்ட இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு வடக்கு மாகாண மக்கள் தம்மை அர்ப்பணித்துள்ளார்கள்.

நமது தாய்நாடு எப்பொழுதுமே ஆசீர்வதிக்கப்படட்டும் – என்றுள்ளது. (ஐ)

# நாடளாவிய ரீதியில் கோட்டாவின் வெற்றியை கொண்டாடும் மக்கள்







கொழும்பு, நவ. 18

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றதை யடுத்து இலங்கை முழுவதும் மக்கள் கொண்டாட்டத் தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதற்கமைய அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் வெற்றிக்கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

குறிப்பாக அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, காரைதீவு, கல்முனை, சாய்ந்தமருது உள்ளிட்ட பிரதே சங்களில் வெற்றியைக் கொண்டாடும் முகமாக இனிப்புப் பொருள்கள் வீதியில் சென்றவர்களுக்குப் பகிர்ந்து வழங்கியும் கொண்டாடி வருகின்றனர்.

இதுதவிர பட்டாசு கொளுத்தி தத்தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் மக்கள் புதிய ஜனாதிபதி மக்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்க வேண்டும் என ஊடகங்களிடம் கருத்துக்களை முன்வைத்தனர்.

இப்பகுதியில் பெரும்பாலான வியாபார நிலை யங்கள் பூட்டப்பட்டு பொதுஜன பெரமுனவின் கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் வெற்றியைக் கொண் டாடினர்.

அதேபோல வவுனியாவிலும் பொதுஜன பெர முனவின் ஆதரவாளர்கள் வெற்றிக்கொண்டாட்டத் தில் ஈடுபட்டனர்.



வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தா னின் அலுவலகத்தில் இருந்து பேரணியாக வாகனங் களில் வந்த ஆதரவாளர்கள் வவுனியா நகர் வழியாக பேரணியாகச் சென்றனர். அத்தோடு வெடி கொழுத்தி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

மற்றுமொரு ஆதரவாளர் குழு, முன்னாள் இராணு வத் தளபதியாக இருந்த கொப்பேகடுவவின் சிலைக்கு மலர் மாலை அணிவித்த கொண்டாட்டத்தில் ஈடு பட்டனர்.

இந்நிலையில் ஈ.பி.டி.பி கட்சியினர் தமது கட்சிக் கொடியை ஏந்தியவாறு வவுனியா வீதி யெங்கும் பேரணியாக வாகனங்களில் சென்றனர்.

மட்டக்களப்பு நகரை அண்டிய பிரதே சங்களில் பொதுஜன பெரமுன கட்சி அமைப்பாளர்களும் ஆதரவாளர்களும் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மணிக்கூட்டுக் கோபுரத் தடி, மஞ்சந்தொடுவாய், கல்லடி, மத்திய வீதி, அரசடி சந்தி, ஊறணி போன்ற இடங் களில் பட்டாசு கொளுத்தி வெற்றிக் கொண் டாட்டங்களில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மணிக்கூட்டுக் கோபு ரத்தில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற கோட்டாபய ராஜபக்ஷ. எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ போன்றோரின் உருவப் படங்கள் பதாதைகளாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைமையகத்துக்கு முன்பாக நேற்றுக் காலை பட்டாசு கள் கொழுத்தி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன் மற்றும் மாநகரசபை, பிர தேசசபை உறுப்பினர்கள், இளைஞர் அணியினர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ)

## வன்முறைச் சம்பவங்கள் குறைவான தேர்தல் இது!

இம்முறை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலேயே குறைந்த வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகத் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் கண்காணிப்பு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 222 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியிருந்தன. இருப்பினும், இம்முறை தேர்தலில் அது 196 ஆகக் குறைந்துள்ளது.

இந்த கணிப்பீடு ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல் நேற்று முன் தினம் வரை இடம்பெற்ற சம்பவப் பதிவுகளின் அடிப்படையில் பெறப்பட்டவை எனவும் அந்த நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

## மாலைதீவு ஜனாதிபதி வாழ்த்து

கொழும்பு, நவ. 18

இலங்கையின் 7 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதி பதியாக தெரிவாகியுள்ள கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக மாலைதீவு ஜனாதிபதி இப்ராஹிம் மொஹமட் தெரிவித்துள்ளார்.

அத்துடன் புதிய நிர்வாகத்துடன் இணைந்து பணியாற்ற தான் விரும்புகிறார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## கூட்டமைப்பின் கருத்தையும் மீறித் தமிழர் கோட்டாபயவுக்கு வாக்களித்துள்ளனராம்!

### பெருமிதம் கொள்கிறார் நாமல் எம்.பி.

கூட்டமைப்பின் கருத்தையும் மீறி தமிழ் மக்கள் பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு வழங்கியுள் ளார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்தோடு வடக்கு மக்களின் ஆதரவு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கிடைக்கப் பெற்றுள்ள தென்றும் அவர் குறிப்பிட்டார்.

பழமையான அரசியல் செயற்பாடுகளில் இருந்து வடக்கு – கிழக்கு மக்கள் இம்முறை மாற்றமடைந்துள் ளார்களென்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கில் நாங்கள் தோல்வி என்று கருத முடி யாது. வெற்றிக்கான அடித்தளம் இடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நல்லாட்சி அரசின் முறையற்ற செயற்பாடுகள் மற்றும் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்ட வர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பலமான அரசைத் தோற்றுவிப்பதற்கு வழிமுறைகளை



ஜனநாயக முறையின் ஊடாக ஏற்படுத்தியுள் ளார்கள். மக்கள் விரும்பும் ஆட்சி முறையை உரு வாக்குவதற்கு நாடாளுமன்றம் தொடக்கம் கிராமிய மட்டத்தில் முன்னெடுத்த முயற்சிகள் அனைத்தும் இன்று வெற்றி பெற்றுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ மற் றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையிலான அரசை உருவாக்க ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி – என்றார். (ஐ)

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
WesternUnion WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தினை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயனைப் பையினை பரிசாக வெல்லுங்கள்
உலகெங்குமிருந்து உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை
No.303, K.K.S. Road, Jaffna. Srilanka.Tel: 021 222 2670/5392 Fax: 021 222 3214
Email: srimurugan09@gmail.com srimurugan303@gmail.com

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.11.2019 இல் வெளியிடப்பெற்றது.